வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.05.2022 புதன்கிழமை | இதழ் : 163 | பக்கங்கள் : 16




# முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று!

## அச்சமின்றி பங்கேற்க அனைவருக்கும் அழைப்பு

முல்லைத்தீவு, மே 18

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 13ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று புதன்கிழமை தமிழர் தாயகம் முழுவதும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் என்று வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

"நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்துள்ளது. இந்த அஞ்சலி நிகழ்வில் அனைவரும் அச்சமின்றி பங்கேற்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அருட்தந்தை 15



# பெண் பிரதி சபாநாயகர் தெரிவாகும் வரலாற்று சந்தர்ப்பம் கை நழுவியது!



## பிரதி சபாநாயகராக பெரமுனவின் அஜித் ராஜபக்ஷ பிரதமரின் கோரிக்கையை நிராகரித்தது மொட்டு

கொழும்பு, மே. 18

**இலங்கை அரசியல் வரலாற்றில் முதலாவது பெண் பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்கு கிட்டிய வாய்ப்பு, மீண்டுமொருமுறை தவற விடப்பட்டுள்ளது.**

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் இணக்கப்பாடின்மையாலேயே இந்த வரலாற்று வாய்ப்பு கைநழுவிப்போயுள்ளது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. 15

## 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ரணில் - சட்டமா அதிபர் ஆலோசனை

கொழும்பு, மே. 18

செயலிழக்கச் செய்யப்பட்டுள்ள அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை உயிர்ப்பித்து மீண்டும் பாராளுமன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்திக் கொள்ளும் வகையில் கொண்டுவரப்படவுள்ள 21ஆவது திருத்தச் சட்டம் தொடர் 15

## அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டும் அரச ஊழியர்களை அழைக்கவேண்டும்!

### அத்தியாவசிய சேவை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மே. 18

நாட்டில் எரிபொருள் உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை காரணமாக அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அரச ஊழியர்களை கடமைக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ்.ருவன் சந்திர தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் வரவழைத்து நிறுவனத் தலைவரின் விருப்பத்திற்கேற்ப செயற்பட அனுமதிக்குமாறு 15



## நான் எந்த பக்கம் என்று எனக்கே தெரியவில்லை

### சபையில் கூறினார் ரணில்

கொழும்பு, மே. 18

பாராளுமன்ற கலாசாரத்தை மாற்றவேண்டிய தருணம் வந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இப்போது தான் எந்தப் பக்கத்தில் நிற்கிறேன் என்று தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் இன்னும் பாலத்தின் நுழைவாயிலில் நிற்கிறேன், இப்போது நான் அதன் எந்தப் பக்கத்தில் நிற்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை.

எதிர்க்கட்சிகளின் கூட்டங்களில் என்னால் பங்கேற்க முடியாது ஆளும் கட்சியின் கூட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை.

இன்று 15

## புலிகளின் தாக்குதல் செய்தியை குறைத்து மதிப்பிடவேண்டாம்!

### கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, மே. 18

தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற செய்திகளை குறைத்து மதிப்பிட வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்தவொரு விடயத்திலும் கவனயீனமாக இருந்துவிட்டு பின்னால் வருத்தப்பட வேண்டாம் என 15

## ஹரின், மனுஷ ரணிலுக்கு கடிதம்

கொழும்பு, மே. 18

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

நெருக்கடியான நிலையில் நாட்டை பொறுப்பேற்று பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்னிலையான மைக்காக ஆதரவு வழங்கவுள்ளதாக 15

## பொதுஜன பெரமுனவின் எம். பிக்கள் இருவர் கைது!

கொழும்பு, மே 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான மிலான் ஜயதிலக, சனத் நிஷாந்த ஆகியோர் நேற்று குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் அமைதிமுறையில் இடம்பெற்ற போராட்ட களத்தில் வன்முறைகளை ஏற்படக் காரணமாக 15

## இப்படியும் நடக்கிறது...!

பேரரசன் நெப்போலியன் பெருங் களிப்பில் இருந்தான். போரில் பெற்ற மாபெரும் வெற்றிதான் அதற்குக் காரணம். அந்த வெற்றிக்குப் பேருதவியாக இருந்த அவனது நான்கு தள பதிகளையும் அழைத்து, "உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்" என்று கூறினான்.

முதல் தளபதி ஜெர்மனியைச் சேர்ந்தவன். அவன் "மன்னா! எனக்கு பாரிஸ் நகரத்தில் ஒரு வீடு கட்டிக் கொள்ள வெகுநாளாக ஆசை" என்றான்.

"உனக்கு பாரிஸ் நகரத்தில் பெரிய மாளிகையே கட்டித்தரச் சொல்கிறேன்" என்றான் நெப்போலியன்.

அடுத்தவன் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்தவன். தனக்கு சொந்தமாக ஒரு ஹோட்டல் நடத்த ஆசை என்று மன்னனிடம் கூறினான்.

நெப்போலியன் சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியுடன், ஏற்பாடு செய்வதாகக் கூறினான்.

மூன்றாம் தளபதி போலந்துக்காரன். அவன் தனக்கு திராட்சையில் மது செய்யும் தோட்டமும், தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டான். அதற்கும் நெப்போலியன் அதே பதில் தான் சொன்னான்.

கடைசி தளபதி ஒரு யூதன். அவன் நெப்போலியனிடம் இரண்டு வாரம் லீவு வேண்டும் என்று கேட்டான். அதற்கு மன்னன் நெப்போலியன், "உன் லீவு நாளை முதல் தொடங்கும்" என்றான்.

அவன் பணித்தவுடன் வெளியே வந்த தளபதிகளில் முதல் மூவரும் யூதனைப் பார்த்து, "சரியான முட்டாளாக இருக்கிறாயே! ஏதாவது விலை மதிப்புள்ளதாகக் கேட்காமல், லீவு வேண்டும் என்று கேட்டாயே?" என்று ஏளனம் செய்தார்கள்.

அதற்கு அவன், "நண்பர்களே, நீங்கள் கேட்டதையெல்லாம் மன்னன் ஏற்பாடு செய்து தருவதாகத்தான் கூறியிருக்கிறான். இன்னும் அவை உங்கள் கையில் கிடைக்கவில்லை. மன்னன் அவன் கொடுத்த வாக்குறுதிகளை நேரடியாகச் செயல்படுத்த அவனுக்கு நேரமிருக்கப் போவதில்லை. அவனது காரியதரிசியைத்தான் பணிக்கப் போகிறான். காரியதரிசியோ ஆயிரம் வேலை செய்பவன். அவனும் அவனுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்குத்தான் இந்த வேலைகளைக் கொடுப்பான். உங்களுக்கு அளிக்கப் பட்ட பரிசுகளுக்கான வாக்குறுதிகளின் முக்கியத்துவம் இப்படி கீழே ஆணைகள் செல்லச்செல்ல கரைந்து கொண்டே போய், மறக்கப்படும் வாய்ப்புகள் அதிகம்" என்றான்.

மற்ற தளபதிகள் "அப்படி நடந்தால் மன்னனிடம் போய் முறையிடலாம்தானே" என்றார்கள்.

யூதத் தளபதி சொன்னான், "நண்பர்களே. மன்னனுக்கு இன்றைக்கு இருக்கும் வெற்றிக் களிப்பு வெகுநேரம் நிலைக்காது. போரில் பெற்ற வெற்றியின் மதிப்பு நாளடைவில் மற்ற பிரச்னைகளுக்கு இடையே ஒளியிழந்து போகும். அதோடல்லாமல், இந்தக் கணத்தில் உங்கள் துறையின் வெற்றி மட்டுமே அவன் கண் முன் நிற்கிறது. நாளை உங்கள் துறையில் ஏதாவது தவறு நடந்தால் நீங்கள் தலை நிமிர்ந்து அவன் முன் நின்று உங்கள் பரிசை உரிமையுடன் நினைவுறுத்த இயலாது. ஆனால், நான் கேட்ட பரிசோ இப்போது என் கையில்" என்றான்.

இதைக் கேட்ட மற்றவர்கள் பேச்சடைத்துப் போனார்கள். யூதத் தளபதி தன் விடுமுறையைத் திட்டமிடக் கிளம்பினான்.

ரணில் பிரதமரானதும் நமது தலைவர்கள் அவர் புகழ்பாடத் தொடங்கியிருக்கின்றனர். அவர் தேர்தலில் வெற்றிபெற்று நல்லாட்சியில் பிரதமரான பின்னரும், அவரது ஆட்சி தொடரவேண்டுமானால் கூட்டமைப்பின் பதினைந்து எம்.பி.க்களின் ஆதரவு இல்லாமல் தொடர முடியாத நிலை. அதாவது, கூட்டமைப்பின் ஆதரவு கிடைத்தால் மாத்திரமே பதவியில் தொடர முடியும். அவ்வளவு முக்கியத்துவம் இருந்துபோதே ரணில் நடத்திய ஆட்சியில் நமக்கு கிடைத்தது என்ன என்பது தெரிந்ததுதான்.

இப்போது, பாராளுமன்றத்தில் மகாபலம் பொருந்திய பொதுஜன முன்னணியின் பாராளுமன்றப் பலத்தோடு ஆட்சிப் பீடம் ஏறியிருக்கின்றார் ரணில்.

ஆனால், அவர் ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் தனது அரசியலமைப்பு திருத்த யோசனையை தூசிதட்டி எடுத்துக்கொண்டு கிளம்பவிருக்கின்றனர் நமது கூட்டமைப்பினர்.

தன்னோடு தொலைபேசியில் பேசிய ரணில், பாராளுமன்றத்தில் அமைக்கவுள்ள சட்டமறுசீரமைப்புக்குழுவுக்கு தலைமை தாங்குவதற்கு கேட்டதில் தான் சம்மதித்ததாகவும், அத்தோடு, தமிழ் மக்கள் சார்ந்த அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் தன்னிடம் கேட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, தமிழ் மக்களின் பிரச்னைகளை நன்கு புரிந்து கொள்ளக்கூடியவர்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. எனவே, அவருடன் பேச்சு நடத்தி, தமிழர் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் பெருந்தலைவர் சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்திகளை படிக்கின்றபோது, நெப்போலியனின் மூன்று தளபதிகளும் தமது தேவைகள் குறித்து கேட்டவைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

நமக்கு இப்போது தேவை அந்த யூத தளபதிபோல அறிவுள்ள ஒரு தளபதிதான்!

**- ஊர்க்குருவி**

# இனப் படுகொலையாளிகளை ஐ.சி.சியில் முற்படுத்த வேண்டும்!

### கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, மே 18

"இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ. சி. சி.) முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தூக்கில் இடப்பட வேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் நேற்று சபையில் தெரிவித்தார்.

மேலும், "இன அழிப்புப் போரின்போது, மக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது கூட தாக்குதல் நடத்தப்பட்டது. இசைப்பிரியா போன்றவர்கள் வன்கொடுமையின் பின் படுகொலை செய்யப்பட்டனர். பாலச்சந்திரன் போன்ற சிறார்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

உணவுத் தட்டுப்பாடு மற்றும் மருந்து தட்டுப்பாடு என்பன இன அழிப்புப் போரில் தமிழர்களுக்கு எதிரான ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் தூக்கில் இடப்பட வேண்டும்.

திட்டமிட்ட அடிப்படையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும். தமிழர்களிடமிருந்து தலைவர்களைத் தேடுங்கள், மாறாக முகவர்களைத் தேட வேண்டாம். எங்களது தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி தீர்வை முன்வைக்கவும்" - என்றார். (ஐ)

# 70 -75 வீதமான டீசல் நாட்டில் விநியோகம்

கொழும்பு, மே 18

நாடு முழுவதும் நேற்று 70-75 சதவீத டீசல் விநியோகம் செய்யப்பட்டதாக இலங்கை பெற்றோலிய தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டீசல் கையிருப்பு நேற்று முன்தினம் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் விநியோகிக்கப்பட்டதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பெற்றோல் விநியோகம் 10 சதவீதத்திற்கும் உள்ளாக குறைவடைந்துள்ளது. இலங்கை பெற்றோலிய தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் மேலும் கூறியது.

நாட்டில் நிலவும் கடும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்படும்!



கொழும்பு, மே. 18

நாடளாவிய ரீதியில் இன்று பெற் றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட வுள்ளதால் அத்தியாவசிய தேவையின்றி பெற்றோலுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வழமையான பெற்றோல் விநியோகம் நாளை வியாழக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுயநல அரசியலைத் தவிர்த்து உறவுகளை நினைவேந்துவோம்!

### சசிகலா ரவிராஜ்

யாழ்ப்பாணம், மே 18

தற்போது நிலவும் சூழலில், நாம் அனைவரும், கட்சி பேதமின்றி சுயநல அரசியல் தவிர்த்து, ஒற்றுமையாக ஓரணியாக செயல்படுவோம் - என்று திருமதி சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும் அந்த அறிக்கையில், 13 ஆண்டுகள் கடந்து விட்டபோதும், அந்த மே18ஆம் நாள் அரங்கேறிய முள்ளிவாய்க்காலின் அவலங்கள், எம் நெஞ்சங்களை நெக்குருகச் செய்கின்றன. சிறியோரும் பெரியோரும் பிள்ளைகளுமாய், எம்மக்கள் உணவுக்காக ஏங்கி நின்றமையை முள்ளிவாய்க்கால் கஞ்சி மூலம் நாம் நினைவு கூருகிறோம்.

யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள், படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் என்று பலரின் நினைவுகளை சுமந்தபடி வலி நிறைந்த உள்ளத்தோடு நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் நம் மக்களின் மனங்களை ஆண்டுதோறும் கூர்வாளொன்று ஊடுருவிச்செல்லும் நாள் மே18. காணாமல் ஆக்கப்பட்ட, தம் உறவுகளைத் தேடிப் போராடி வருடக்கணக்கில் வாதாடி,



வாடி வதங்கி, நிர்க்கதியாகி நிராசையோடு கண்களை நிரந்தரமாய் மூடிக்கொண்ட எம்மவர்கள் பலர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளும், எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டு, அப்பாவிகள் சிந்திய இரத்தத்தின் சத்தம் இறை சந்நிதானத்தில் ஒங்கி ஒலிக்கும் என்ற பழமொழிகளை எமக்கு நினைவுபடுத்துகின்றன.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களை, அரசு கையாளும் பாங்கு, மகள் உடைத்தால் மண் குடம் மருமகள் உடைத்தால் பொற்குடம் என்பது போலவே காணப்படுகிறது. எமது இளைஞர்கள், தம்மை வன்முறைகளில் ஈடுபடுத்தாது ஒதுங்கியிருந்தமை அவர்களின் முதிர்ச்சியையும் பொறுமையையும் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

எமது உறவுகளை நினைவுகூரும் இந்நாளில், தற்போது நிலவும் சூழலில், நாம் அனைவரும், கட்சி பேதமின்றி சுயநல அரசியல் தவிர்த்து, ஒற்றுமையாக ஓரணியாக செயல்படுவோம் - என்றுள்ளது. (ஐ)

# இரத்ததான முகாம்!

முல்லைத்தீவு, மே 18

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தலை ஒட்டி தமிழர் தாயகத்தில்இன்று பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த வகையில், முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான முகாம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

"குருதியால் தோய்ந்த நம் தேசத்துக்காக ஒரு துளி குருதி" என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் அனைவரும் கலந்து கொண்டு இறுதிப் போரில் உயிர்நீத்த எமது உறவுகளின் நினைவாக இரத்ததானம் செய்யுமாறு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் கேட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.05.2022 புதன்கிழமை
பிலவ வருடம், வைகாசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# முள்ளிவாய்க்கால் - 13

நாலடியாரில் ஒரு கூற்றுண்டு. கழிந்து செல்லும் நாட்கள் அனைத்தும் உனது வாழ்நாட்களாகும். இது அரசியலுக்கும் பொருந்தும். அரசியலிலும் கடந்து சென்ற காலமென்று ஒன்றுண்டு. நமது கடந்த காலத்தை நினைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நாம் இப்போது எந்த இடத்தில் இருக்கின்றோம்? - முன்னேற்றகரமான நிலையில் இருக்கின்றோமா? - அல்லது தொடர்ந்தும் பின்னடைவுகளை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கின்றோமா? இந்தக் கேள்விகள் நம் அனைவருக்குமானது. இந்தக் கேள்விக்கான பதிலை அனைவரும் நேர்மையுடன் தேடவேண்டும். இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடுவதில் குற்றச்சாட்டுக்கள் பயனளிக்காது. மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது, ஒரு வகையில் ஒவ்வொருவரும், தங்களின் பொறுப்புக்களிலிருந்து தப்பியோடுவதற்கு சமமானதாகும்.

முள்ளிவாய்க்கால் அவலம் நேர்ந்து 13 ஆண்டுகள் சென்றுவிட்டன. இந்தக் காலத்தில் தமிழர் அரசியலில் முன்னேற்றகரமான அடைவுகள் எதனையும் எவராலும் நிரூபிக்க முடியவில்லை. அரசியலில் அடைவுகள் தொடர்பில் பேசுகின்றபோது, காலம், காலத்தை கையாள முற்படும் அரசியல் சக்திகள் ஆகிய இரண்டும் முக்கியமானவை. இரண்டும் ஒரு புள்ளியில் சந்திக்கும்போதுதான், அரசியல் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் நன்மையடைகின்றனர். ஒரு போராட்டம் வெற்றிபெறுகின்றபோது, இவ்வாறான உரையாடல்கள் தேவைப்படாது. ஆனால், தோல்வி ஏற்பட்டுவிட்டால் - தோல்விக்கு பின்னரான காலத்தை கையாள முற்படும்போதுதான், இந்தக் கேள்வி அவசியப்படுகின்றது.

கடந்த 13 வருடங்களில் ஏராளமான விடயங்கள் தொடர்பில் தமிழ் அரசியல் சமூகம் விவாதித்திருக்கின்றது. இதில், மற்றவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களே அதிகம். ஆனால், அடைந்தது என்ன? - என்று கேள்வியெழுப்பினால், அனைவரின்  நகர்வுகளும் தோல்வியில்தான் முடிந்திருக்கின்றது. லெனினின் ஒரு கூற்றுண்டு. அதாவது, "வரலாற்றில் தோல்வியடைந்த ஒவ்வொரு மக்கள் கூட்டமும், தங்களின் ஆற்றல் எங்கு திரண்டிருக்கின்றது என்பதை கண்டுகொள்ளாமையாலேயே தோற்றுப் போனார்கள்."

தமிழர்களின் பலம் எது - பலவீனம் எது என்பதில் ஆழமான புரிதல்கள் இல்லை. அபரிமிதமான கற்பனைகளிலேயே பலரின் காலம் கழிந்திருக்கின்றது. விரலுக்கேற்ற வீக்கம் என்பார்கள். ஓர் ஒடுக்கப்பட்ட சமூகம், தன்னை எவ்வாறு தயார்படுத்திக் கொள்கின்றதோ - அதற்கேற்பவே, நன்மைகளை அடைகின்றது.

தமிழர்களின் இன்றைய அரசியல் என்பது, அடிப்படையிலேயே, ஒரு போரியல் தோல்விக்கு பின்னரான அரசியலாகும். அந்தப் போரில் ஏன் தோல்வியேற்பட்டது என்பது தொடர்பில் தெளிவான பார்வை இருக்க வேண்டும். இதனை மறந்து அரசியல் தொடர்பில் விவாதிக்க முற்படுவது தவறானது. ஒரு போரியல் தோல்வியேற்படும்போது, போர்க் காலத்தைய நம்பிக்கைகள், நிலைப்பாடுகள், எதிர்பார்ப்புக்கள் அனைத்துமே தோல்வியடைந்துவிடும்.

போரியல் தோல்விக்கு பின்னரான காலமென்பது, அடிப்படையில், யுத்த விளைவுகளை முன்னிறுத்தி, அரசியலை முன்னெடுக்கும் அரசியல் காலமாகும். இந்தப் பின்னணியில்தான், ஈழத் தமிழர்களாகிய நாங்கள், இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களை முன்வைத்து, அதற்கான நீதியை கோரும் அரசியலை முன்னெடுத்து வருகின்றோம்.

முள்ளிவாய்க்கால் என்பது, பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டமொன்றுக்கான நீதியை கோரும் பயணத்திற்கான, ஒரு கூட்டு நினைவாகும். முள்ளிவாய்க்கால் அடிப்படையில் ஒப்பாரி வைப்பதற்கான ஒரு குறியீடல்ல. எங்களை சீர்தூக்கி பார்த்து, எங்களுக்குள் இருக்கும் தேவையற்றவற்றை களைந்து, எங்களை தயார்படுத்திக் கொள்வதற்கான ஓர் உந்துசக்தியாகும். ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்காலை நினைத்துவிட்டு, பின்னர் ஆண்டு முழுவதும், கட்சிகளின், சிவில் சமூக குழுக்களின் ஒற்றுமை பற்றி விவாதம் செய்தால், முள்ளிவாய்க்கால் சாதாரணமாக நினைத்துச் செல்லும் ஒரு சம்பிரதாயபூர்வமான நிகழ்வாகிவிடும். கடந்த 13 வருடங்கள் இப்படித்தான் கடந்திருக்கின்றன. கடந்த 13 வருடங்களில் தமிழ்த் தேசிய பரப்பில் - களத்திலும் புலத்திலும் ஒற்றுமை வளர்ந்ததைவிடவும், சிதைந்ததே அதிகம். அவ்வாறாயின் முள்ளிவாய்க்கால் நேர்மையுடன் நினைக்கப்பட்டிருப்பதாக நாம் எவ்வாறு கூறமுடியும்?

# இரு வேறுபட்ட ஆட்சிமுறை நிலவும் அரசு!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் இன்றைய ஆட்சி முறை வேடிக்கையானதாக அமைந்துள்ளது. ஒரு புறத்தே நிறைவேற்றதிகார ஆட்சியும் மறு புறத்தே பாராளுமன்ற ஆட்சியும் இரு வேறு கட்சிகளால் மேற்கொள்ளப்படும் நிலை காணப்படுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷமீது மட்டுமல்ல. அவரின் சகோதரரான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதனையடுத்தே ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'ஆபத்பாந்தவனாக' அரசையும் பாராளுமன்ற ஆட்சிமுறையையும் காப்பாற்றும் விதத்தில் பிரதமர் பதவியை பொறுப்பேற்றுள்ளதோடு தமது நாட்டு மக்களுக்கான உரையையும் நேற்று முன்தினம் தொலைக்காட்சி வாயிலாக நிகழ்த்தியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதனையும் பூசி மெழுகாது நேர்மையான முறையில் தமது உரையை வழங்கியிருந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உரையில் அடுத்த சில மாதங்கள் மிகவும் கஷ்டமான நிலவரங்களை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று நியாயபூர்வமான முறையில் தெரிவித்திருந்தார்.

இன்றைய நாட்டு நிலவரத்துக்கு எவ்வகையிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பாளியாகிவிட முடியாது. ஏனெனில், அவர் ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்ட போதெல்லாம் மக்கள் அவரை நிராகரித்திருந்தனர். ராஜபக்ஷ கூட்டத்தினரின் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' தவறான பிரசாரங்களாலும், மறுபுறத்தே வடக்கு - கிழக்கு யுத்த வெற்றி குறித்து அவர் மேற்கொண்டு வந்த பிரசாரங்களாலும் கவரப்பட்டவர்களாகவே மக்கள் இருந்து வந்தனர்.

ஆனால், தற்போது உண்மை நிலவரம் வெளிச்சத்துக்கு வந்துள்ள நிலையில் ராஜபக்ஷவினர் தற்போது மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையிலிருக்கின்றனர். "உண்மையை ஒரு போதும் மறைக்க முடியாது. அது வெளிப்படும் போது பொய்மையை சுட்டெரிக்கும்" என்று புத்த பகவான் கூறியிருந்தார்.

புத்தபகவான் கூறியது அவர் அவதரித்த காலத்தை கொண்டாடும் வெசாக் காலப் பகுதியிலேயே இலங்கையில் நிரூபணமாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை 'வங்குரோத்து' நிலையை எட்டிவிட்டது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபின்னர் நாட்டைப் பொறுப்பேற்கும் இலங்கையின் முதலாவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார்.

கடந்த காலங்களில் இலங்கை பல கஷ்டமான சூழ்நிலைகளைச் சந்தித்திருந்தது. ஆனால், இன்றிருப்பது போல அதல பாதாளத்தில் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ந்திருக்கவில்லை.

இதன்காரணமாகவே அடுத்துவரப் போகின்ற சில மாதங்கள் பொருளாதார ரீதியாக சிரமான சூழ்நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்குமெனவும் கூறியிருப்பதோடு எதனையும் மூடிமறைக்காது பொய்யான வாக்குறுதிகளை வழங்காது பிரதமர் தமது உரையை நிகழ்தியிருந்தார்.

பிரதமர் பதவியை தாம்பெற்றுக்கொண்டது ஒரு குடும்பத்தையோ அல்லது தனிநபரையோ, கட்சியையோ பாதுகாக்கவல்ல எனவும் நாட்டைப் பாதுகாக்கவே தாம் பிரதமர் பதவியை ஏற்க முன்வந்ததாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக்கொண்டமை இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் இலங்கை தொடர்பாக திருப்தியடைய வைத்துள்ளது. ஏனெனில், சர்வதேச அரசியலில்கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவராக இருக்கின்றார். அத்துடன், அவரின் ஆளுமையின் கீழ் நிதி ஒதுக்கீடுகளைக் கூட சர்வதேச சமூகம் மேற்கொள்ள முன்வரும். ஏனெனில், தற்போது நாட்டு மக்களின் ஆத்திரத்துக்குள்ளாகியுள்ள ராஜபக்ஷவினர் எவ்வளவு தூரம் ஊழல், மோசடிப்பேர்வழிகளாக இருந்துள்ளனர் என்பதை நாட்டு மக்களே அக்கு வேறு ஆணி வேறாக நிரூபித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்களுமே அவரால் நன்கு கணிப்பீடு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டவையாகவே இருக்கின்றன.

இத்தகைய பின்னணியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வாலறுந்த பட்டமாக இருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.


பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுள்ளமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அரசியலில் அநாதரவாக்கிவிட்டுள்ளது.  ஏனெனில், அவரை நிறைவேற்றதிகாரத்தில் வைத்துக்கொண்டு தமது மனம்போன போக்கில் தம்மையும் தாம் சார்ந்தவர்களையும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ காப்பாற்றி ஊழல், மோசடிகளுக்கு வழியமைத்துள்ளதையே அறிந்து கொள்ள முடிந்தது.

எனவே புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு முன்பிருந்தவர்களைப்போலன்றி முற்று முழுதாகவே பொருளாதார ரீதியாக செயல்பட வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாகியுள்ளார்.

முழு நாட்டையும் பொருளாதார ரீதியான அழுத்தங்களிலிருந்து பாதுகாக்க வேண்டியதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையாய கடமையாக இருக்கின்றது. இதில் அவர் வெற்றி பெறுவாரா? அல்லது தோல்வியடைவாரா ? என்பதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

இந்தக் கட்டத்தில் கடந்த காலங்களில் போல ராஜபக்ஷ குடும்பத்தினரால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கமீது குறைகளைக்கூறி தமது பசப்பு வார்த்தைகளையும் பேசி நாட்டு மக்களை இனிமேலும் ஏமாற்றிவிடமுடியாது என்பதே நிச்சயமாகியுள்ளது. •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். எதிர்ப்புகள் தலைதூக்கும். பயணத்தில் கவனம் தேவை. உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் இழுபறியான நிலை ஏற்படும்.

**இடபம்**
மனதிற்கினிய சம்பவங்களால் மகிழ்ச்சியான நிலையை அடைவீர்கள். நண்பர்கள் வழியே எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை உண்டாகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உண்டான பிரச்சனைகள் தீரும். விஜபிகளின் ஆதரவு உண்டாகும். எதிர்கால சிந்தனை மேலோங்கும். நீண்டநாள் திட்டங்களில் ஒன்று நிறைவேறி மனம் மகிழ்வீர்கள்.

**கடகம்**
செயல்களில் தடைகள் தோன்றும். நண்பர்களால் ஆதாயம் காண்பீர்கள். தொழில் நிலையில் கூடுதல் கவனம் தேவைப்படும். குலதெய்வ அருளால் நீங்கள் ஈடுபடும் செயலில் வெற்றி ஏற்படும்.

**சிம்மம்**
அரசு வழியே சில சங்கடங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும். யோசித்து செயல்படுவதின் வழியே நெருக்கடிகளை சமாளிக்க முடியும். தாய் வழி உறவுகளால் நன்மைகளைக் காண்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தினரின் எண்ணத்திற்கு மதிப்பளித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயங்களால் பொன் பொருள் சேர்க்கை உண்டாகி மகிழ்வீர்கள்.

**துலாம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். நெருக்கடிகளில் இருந்து மீள்வதற் காக புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவீர்கள். உங்கள் அறிவாற்றலால் சங்கடங்களில் இருந்து இன்று மீள்வீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் புத்திசாலித்தனம் பளிச்சிடும். வாக்கு வன்மையால் நினைத்ததை அடைவீர்கள். உங்கள் கவனக்குறைவால் சில இழப்புகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.

**தனுசு**
எதிர்பாராத செலவுகளால் சங்கடத்திற்கு ஆளாக நேரும். முதலீடு செய்வதில் உங் கள் எண்ணம் செல்லும். இருப்பு கரையும். என்ன வந்தாலும் சமாளிக்க முடியும் என்ற தைரியம் உண்டாகும்.

**மகரம்**
நினைத்தது நிறைவேறும். உங்களுக்கு வேண்டியதை இன்று அடைவீர்கள். பழைய பிரச்னைக்கு இன்று முடிவு காண்பீர்கள். நிம்மதியான நாள். திடீர் வருமானம் உண்டாகும்.

**கும்பம்**
கடினமான வேலைகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

**மீனம்**
கடினமான வேலைகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். வேலை விஷயமாக புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும்.

# நிவாரணப் பொருட்களுடன் இலங்கை புறப்படுகிறது கப்பல்!

*சென்னை, மே 18*

இலங்கைக்கு அனுப்பப்படவுள்ள நிவாரணப்பொருட்களை சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள கப்பலில் ஏற்றும் பணி நேற்று நடந்தது.

இலங்கைக்கான தமிழகத்தின் நிவாரண திட்டத்தில், 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா, 137 வகை யான உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப் படவுள்ளன. முதல்கட்டமாக 8.8 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான 55 வகை அத்தியாவசிய மருந்துகள், 2 சிறப்பு மருந்துகள் அனுப்பப் ஸ்ரீபடுகின்றன.



இந்தப் பொருட்களை கப்பலில் ஏற்றும் பணிகள் நேற்று இடம்பெற்றன. இந்தப் பொருட்களுடன் இன்று புதன் கிழமை கப்பல் இலங்கை புறப் படுகிறது. முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கொடியசைத்து பயணத்தை ஆரம்பித்து வைப்பார். (ஐ)

# இந்தியாவை வழிநடத்தும் தகுதி தமிழகத்துக்கு உண்டு!

## தமிழக ஆளுநர் புகழாரம்

*சென்னை, மே 18*

நாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழகம் முன்னேறிய மாநிலமாக திகழ்கிறது. கல்வி, சுகாதாரம், தொழில் துறைகளில் சிறந்து விளங்குகிறது. இந்தியாவை வழிநடத்தும் தகுதி தமிழகத்துக்கு உண்டு என்று சென்னை பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ஆர். என். ரவி புகழாரம் சூட்டினார்.

நேற்று அவர் பங்கேற்ற நிகழ்வு ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உலகிலேயே மிகவும் பழமைவாய்ந்த மொழியான தமிழ், இலக்கியச் செழுமையும், ஆன்மிக சிறப்பும் நிறைந்தது. தமிழின் சிறப்புகள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும். உயர் நீதிமன்றத்தில் தமிழ், வழக்காடு மொழியாக வேண்டும்.

தமிழ் மொழி மீது பிரதமருக்கு தனி மரியாதை உண்டு. பிரதமர் அறிவுறுத்தலின்படி, மற்றமாநிலங்களில் தமிழை 3ஆவதுவிருப்ப மொழியாக்க மத்திய கல்வி அமைச்சகம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

நாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழகம் முன்னேறிய மாநிலமாக திகழ்கிறது. கல்வி, சுகாதாரம், தொழில் துறைகளில் சிறந்து விளங்குகிறது. இந்தியாவை வழிநடத்தும் தகுதி தமிழகத்துக்கு உண்டு - என்றார். (ஐ)

# இலங்கைக்கு நிவாரண திட்டம் ரூ. 37 ஆயிரம் வழங்கிய யாசகர்!



*திண்டுக்கல், மே 18*

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை மக்க ளுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள இலங்கை மக்களுக்கான நிவா ரண நிதிக்கு பொதுமக்களிடம் யாசகமாக பெற்று 10 ஆயிரம் ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 37 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளார் தமிழ்நாடு யாசகர் ஒருவர்.

பொதுமக்களிடம் யாசகம் பெற்று சேர்த்த 10,000 ரூபாயை இலங்கை தமிழர்களுக்காக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் நிவாரண நிதி வழங்கியுள்ளார் யாசகர் பூல்பாண்டி.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு தன்னால் ஆன உதவி செய்ய வேண்டும் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்று தூத்துக்குடி மாவட்டம் ஆலங்கிணறை சேர்ந்த யாசகர் பூல்பாண்டி பொது மக்களிடம் யாசகம் பெற்றார். இதில், ரூ 10,000 ரூபாய் சேர்ந்தது இதனை யடுத்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்த பூல்பாண்டி மாவட்ட ஆட்சியர் விசாகனை நேரில் சந்தித்து தான் யாசகமாக பெற்ற பத்தாயிரம் ரூபாயை இலங்கைத் தமிழர் நிவாரண நிதியாக வழங்க சென்றார்.

இவர் கடந்த சில தினங்க ளுக்கு முன்பு இலங்கைத் தமி ழர் நிவாரண நிதியாக மதுரை மாவட்ட ஆட்சியரிடம் ரூபாய் 50,000 வழங்கினார்.

இதேபோல் கொரோனா காலத்திலும் பொது மக்களிடம் யாசகம் பெற்று தமிழக அரசுக்கு நிவாரண நிதி வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தமிழ் ஈகையருக்கு சசிகலா அஞ்சலி

*தஞ்சாவூர், மே 18*

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்கு, முதல் முறையாக வந்த சசிகலா தமிழ் ஈகையருக்கு மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தினார்.

2009 ஆண்டு மே 16, 17, 18 நாள்களில் இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலையில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர். அந்த ஈகையினரின் தியாகத்தை போற்றும் வகையில் தஞ்சாவூர் விளார் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

13ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கு சசிகலா முதல்முறையாக வந்து தமிழ் ஈகையருக்கு மலர் வளையம் வைத்து நினைவு அஞ்சலி செலுத்தினார்.

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறனை சந்தித்து முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு அருங்காட்சியகத்தை பார்வையிட்டு தியாகிகள் வரலாறுகளையும் படித்துத் தெரிந்து கொண்டார். (ஐ)

# ரணிலின் அரசில் இணைவது உறுதி

## ஹரீன் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, மே.18

**அமைச்சர் பதவிகளை ஏற்று புதிய அரசாங்கத்தில் இணைந்து கொள்வ தாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித் தார்.**



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான புதிய அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர் பதவிகளை ஏற்கவேண்டும் என தாம் நம்புவதாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட ஹரின் பெர்னாண்டோ தெரி வித்தார்.

இது குறித்து கட்சி முடிவு எடுக்கும் வரை இன்னும் ஒரு நாள் பொறுத்திருப்பேன் என்றும் அவர் கூறினார்.

“சஜித் பிரேமதாஸ இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர், அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த தருணத்தில் நாம் அரசியலைப் பற்றி சிந்திக்காமல் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டும் என்று நான் நினைக் கிறேன்.

இன்னும் ஆறு மாதங்களில் எமக்கு ஒரு நாடு இருக்காது. இந்த நெருக்கடியை தீர்க்க இந்த புதிய அரசாங்கத்தில் சஜித் பிரேமதாஸவும் அனுரகுமார திஸாநாயக்கவும் இணைய வேண்டுமென நான் விரும்புகிறேன்.

கோட்டா கோ ஹோம் செயல்முறைக்கான கோரிக்கையை உள்ளடக்கிய ஏழு அம்சங்களு டன் நாங்கள் பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பி யுள்ளோம். நேர்மறையான பதில் கிடைத்தவுடன் நாங்கள் ஒரு முடிவை எடுப்போம். இதில் நான் தனியாக இல்லை.

கோட்டாபய சித்திடைய நான் அரசாங்கத்தில் சேரமாட்டேன். அவர் தோல்வியடைந்தார். இப்போது இந்த தோல்வியுற்ற நபரை வெளியே அனுப்பவேண்டும். ஆனால் அது அரசியலமைப் பின் மூலம் நடக்கவேண்டும்.

பிளான் ஏ என்பது ஐக்கிய மக்கள் சக்தி அதி காரபூர்வமாக அரசாங்கத்தை ஆதரிக்க வேண் டும். அது நடக்கவில்லை என்றால் நாங்கள் பிளான் பி இற்கு செல்ல வேண்டும்.

புதிய அமைச்சரவையில் இணைந்து கொண் டால் அமைச்சுப் பதவிகளுக்கான சலுகைகள் எதனையும் ஏற்கப் போவதில்லை-என்றார். (அ)

# கடவுச்சீட்டு விநியோகம் நேற்று முதல் வழமைக்கு

கொழும்பு, மே. 18

ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை விநியோ கிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் வழமை போன்று முன்னெடுக்கப்பட் டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சேவைகளை பெற் றுக்கொள்வதற்கு முன்கூட் டியே திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கி வருகை தருவது கட் டாயமானதாகும் என திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

அதற்காக, www. immigration.gov.lk எனும் இணையத்தளத்தினூடா கவோ அல்லது 070 7101060 எனும் தொலைபேசி இலக்கத் தையோ பயன்படுத்துமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதா யின், அரச கடமை நாட்களில் காலை 8.30 மணி முதல் பிற் பகல் 3 மணி வரை அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன.

இதனிடையே, கடவுச்சீட் டுக்கான கட்டணங்கள் அதிக ரிக்கப்படும் மற்றும் கடவுச் சீட்டுக்களின் கையிருப்பு முடி வடைவதாக பரவும் வதந்தி களில் எவ்வித உண்மையும் இல்லை என குடிவரவு மற் றும் குடியகல்வு திணைக் களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சாமர சம்பத் எம்.பிக்கு முகநூல் மூலம் மிரட்டல்!

கொழும்பு, மே.18

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சாமர சம்பத் தசநாயகவுக்கு முகநூல் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.

குறித்த முகப்புத்தகத்தில் “நீ இன்னும் உயிருடன் இருக்கிறாயா? எமது பட்டி யலில் நீயும் இருக்கின்றாய்.” என பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சாமர சம்பத் தசநாயகவின் ஆலோசனைக்கு அமைய, அவரின் செயலாளரினால் ஹாலிஎல பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டது

யாழ்ப்பாணம், மே. 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் முள்ளி வாய்க்கால் நினைவு தாங் கிய ஊர்தி கிளிநொச்சியி லிருந்து பயணத்தை ஆரம்பித்தது.

இந்த ஊர்தி நேற்று முன் தினம் பிற்பகல் கிளிநொச்சியை வந்தடைந்தது. நேற்று காலை டிப்போ சந்தியில் விளக்கேற்றப்பட்டு அஞ்சலிகளின் பின்னர் கிளிநொச்சி சேவைச் சந்தை உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று அஞ்சலிக்கப்பட்டது.

அங்கு முள்ளிவாய்க் கால் நினைவு கஞ்சி வழங்கப்பட்டு பின்னர் பரந்தன் ஊடாக முல்லைத்தீவு நோக்கிப் பய ணம் ஆரம்பிக்கப்பட்டது. (அ)



# ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்தும் எங்கள் போராட்டம் தொடரும்

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே.18



ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் தொடரும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையை மீண்டும் கட்டியெ ழுப்ப எடுக்க வேண்டிய முதல் நடவ டிக்கை இதுவாகும் என அவர் கூறி னார்.

ருவிட்டரில் நேற்று செவ்வாய்க் கிழமை பதிவிட்டுள்ள அவர், தற் போதைய ஆட்சியில் ஐக்கிய மக்கள் சக்தியில் எவரும் எந்தப் பதவியையும் ஏற்கமாட்டார்கள்.

எவ்வாறாயினும், ஸ்திரத்தன்மைக் காக அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் நாம் ஆதரிப் போம்.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்து அரசாங்கத்தில் அமர முயற்சித்தால், அரசாங்கத்துக்கு வழங்கப்படும் அனைத்து ஒத்துழைப்புக்களிலிருந்தும் விலகிக்கொள்வோம்-என்றார். (அ)

காலி முகத்திடல் சம்பவம்

# மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கைது

கொழும்பு, மே.18

காலி முகத்திடல் சம்பவம் தொடர் பில் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா மற்றும் நகர சபை ஊழியர் ஒருவரும் குற்றப் புல னாய்வு அதிகாரிகளால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு அருகில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடு பட்டவர்கள் மீது தாக்குதல் நடத் தப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள போதிலும் சம்பவம் தொடர்பில் இது வரை ஒருவர் மாத்திரமே கைது செய்யப்பட்டிருந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா மற்றும் நகர சபை ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய 78 பேரை அடையாளம் காண்பதற்காக பொலிஸார் தற்போது பொது மக்களின் உதவியை கோரி யுள்ளனர்.

அவர்களின் படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள் ளனர்.

இதனை தொடர்ந்து, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 22 பேரை கைது செய்து வாக்குமூலம் பெற்றதன் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்டமா அதிபரினால் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன் சஞ்ஜீவ எதிரிமான்ன, மிலான் ஜயதிலக மற்றும் டொன் பிரியசாத் உள்ளிட்டோரும் அதில் அடங்குகின்றனர்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புல னாய்வு திணைக்களத்தினால் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்ட தகவல் களுக்கு அமைய குறித்த நபர்களை கைது செய்யுமாறு ஆலோசனை வழங் கப்பட்டுள்ளது.

(அ)

ஈழநாடு



# புதிய அரசுக்கு ஆதரவில்லை!

## தேசிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, மே. 18

**பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**



பல டீல்களுடன் அரசாங்கத்தை அமைக்கும் இந்த செயற்பாட்டை எதிர்ப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

எனவே அரசாங்கத்திலோ அல்லது அதன் வேலைத்திட்டங்களிலோ தாங்கள் ஒரு தரப்பினராக இருக்கமாட்டோம் என அவர் கூறினார்.

எவ்வாறாயினும், 21 ஆவது திருத்தம் போன்ற முற்போக்கான நடவடிக்கைகளுக்கு தேசிய மக்கள் சக்தி ஆதரவை வழங்கும் என்றும் அவர் கூறினார். (அ)

# அந்நியர்கள் கும்பலொன்று பாராளுமன்ற வளாகத்தில்!

## சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 18



பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அந்நியர்கள் குழுவொன்று பாராளுமன்ற வளாகத்திற்குள் பிரவேசித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அந்நியர்கள் பாராளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்து தொலைபேசியில் புகைப்படங்களையும் காணொளிகளையும் எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனால் சிலர் பாராளுமன்றுக்குள் வருவதற்கு பயப்படுவதாகவும் எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை கவனத்திற் கொண்டு அந்த நபர்கள் யார் என்பதை கண்டறிந்து நடவடிக் கைகளை முன்னெடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# பிரதிச் சபாநாயகர் தேர்தலுக்கு 9 மில்லியன் ரூபாய் செலவாகும்

## சபையில் விமல் தெரிவிப்பு

கொழும்பு, மே. 18



பிரதிச் சபாநாயகர் பதவிக்கான தேர்தலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ எதிர்ப்பு தெரிவித்ததுடன், பணத்தை வீண் விரயம் செய்யாமல் இணக்கப்பாட்டுக்கு வருமாறு கேட்டுக்கொண்டார்.

தேர்தலை நடத்துவதற்கு சுமார் 9 மில்லியன் ரூபாய் செலவாகும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முன்மொழியப்பட்டன.

அதன்படி, ரோஹினி கவிரத்னவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்ததோடு, அஜித் ராஜபக்ஷவின் பெயரை ஜி.எல்.பீரிஸ் முன்மொழிந்தார்.

இதனையடுத்து, வாக்கெடுப்பு இடம்பெறவிருந்த நிலையில், பணம் மற்றும் நேரத்தை வீணடிப்பதை விடுத்து, வாக்கெடுப்புக்கு செல்லாமல் ஒருவரை தெரிவு செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பலர் கோரிக்கை விடுத்தனர்.

ஆயினும் பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென சபாநாயகர் தெரிவித்ததையடுத்து, வாக்கெடுப்பு இடம்பெற்றது. (அ)

# பிரதமர் கூறியமையாலேயே ரோஹினியை நியமித்தோம்

## சபையில் கூறியது எதிர்க்கட்சி

கொழும்பு, மே. 18

பாராளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு பெண் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டதாலேயே ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரோஹினி கவிரத்ன நியமிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அத்தோடு, சபையில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, பெண் உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தி, பிரதிச் சபாநாயகர் பதவிக்கு பெண் ஒருவரை நியமிக்குமாறு பிரதமர் பரிந்துரைத்துள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவின் நியமனத்தை தாங்கள் அங்கீகரிப்பதாக தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான வாக்கெடுப்பு மீதான வாதப்பிரதிவாதங்கள் முழுவதிலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மௌனமாகவே காணப்பட்டார்.

பாராளுமன்றத்தில் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முன்மொழியப்பட்டன.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ரோஹினி கவிரத்னவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்ததோடு, அஜித் ராஜபக்ஷவின் பெயரை ஜி.எல். பீரிஸ் முன்மொழிந்தார்.

இதனையடுத்து, வாக்கெடுப்பு இடம்பெறவிருந்த நிலையில், பணம் மற்றும் நேரத்தை வீணடிப்பதை விடுத்து, வாக்கெடுப்புக்கு செல்லாமல் ஒருவரை தெரிவு செய்யுமாறு எதிர்க்கட்சிகளும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இருக்கும் கட்சிகளும் வலியுறுத்தின.

எவ்வாறிருப்பினும் பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென சபாநாயகர் தெரிவித்ததையடுத்து, தற்போது வாக்கெடுப்பு இடம்பெற்றது. (அ)

# மஹிந்தவும் நாமலும் சபைக்கு வரவில்லை



கொழும்பு, மே. 18

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்றைய சபை அமர்வில் பங்கேற்கவில்லை. எனினும், சமல் ராஜபக்ஷ, சஷீந்திர ராஜபக்ஷ ஆகியோர் சபை அமர்வில் பங்கேற்றிருந்தனர். மே 09 சம்பவத்தின் பின்னர், 10 ஆம் திகதி அலரிமாளிகையில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ வெளியேறினார். அதன் பின்னர் திருமலை கடற்படைத் தளத்தில் தங்கவைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மொட்டு கட்சி கூட்டத்திலும் மஹிந்த, நாமல் ஆகியோர் பங்கேற்கவில்லை. நேற்றைய சபை அமர்விலும் கலந்துகொள்ளவில்லை. (அ)

# சகலருக்கும் சிறந்த சேவை வழங்குவார் பிரதமர் ரணில்

## விஜயகலா மகேஸ்வரன் நம்பிக்கை



யாழ்ப்பாணம், மே. 18

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைவருக்கும் நாட்டின் பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க சிறந்த சேவை புரிவார் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக பதவி ஏற்றமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது நாடு பூராகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மூவின மக்களுக்கும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியை ஏற்றுள்ளார். கிடைக்கப்பெற்றுள்ள பிரதமர் பதவியின் மூலம் வாக்களித்த மக்கள், வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைத்து மக்களுக்கும் அதாவது மூவின மக்களுக்கும் இன மத பேதமின்றி சேவையை புரிவார். பொதுமக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (அ-03)

# அரசுக்கு எதிராக இன்று தொடக்கம் நாடு தழுவிய எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, மே. 18

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு தழுவியதாக இன்று முதல் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு குழு இவ் அழைப்பை விடுத்துள்ளது.

- திருடர்களை பாதுகாக்கும் டீல் வேண்டாம்.

- தாக்குதலுக்கு பொறுப்புக் கூறவேண்டிய மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

- அரசாங்கத்தின் பழிவாங்கும் செயலை உடனே நிறுத்த வேண்டும்.

என்ற கோரிக்கைகளை வலியுத்தி இன்று முதல் நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# காலிமுகத்திடல் தாக்குதலை தடுக்கவேண்டாமென தொலைபேசியில் உத்தரவிட்டது அரச உயர்மட்டம்!

## தேசபந்து தென்னக்கோன் வெளியிட்ட அதிர்ச்சி தகவல்



கொழும்பு, மே 18

**காலிமுகத்திடலில் அமைதிவழியில் போராடியவர்கள் மீது பொதுஜன பெரமுன குண்டர்கள் நடத்திய தாக்குதல், நடைபெறாமல் தடுக்க தாம் தயாரித்த விசேட பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகள் கடும் அழுத்தங்களை பிரயோகித்ததாக மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வாக்குமூலமொன்றில் தெரிவித்துள்ளார்.**

இந்த விசேட பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்காத காரணத்தினால் காலிமுகத்திடலில் இருந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தென்னக்கோனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்ட குண்டர் படை உள்ளிட்ட குழுவினர், மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர், அலரி மாளிகையின் முன்பாகவும், காலி முகத்திடலிலும் அமைதி வழியில் போராடியவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

இதன்போதே அவர் மேற்படி அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

காலி முகத்திடல் போராட்ட மைதானத்தில் தாக்குதல் நடத்த வந்தவர்கள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகிக்கவேண்டாம் என இந்த சிரேஷ்ட அதிகாரிகள் தம்மை அழைத்து அழுத்தம் கொடுத்ததாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பம் முதலே காலிமுகத்திடலுக்கு பேரணியாக செல்வதை தவிர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அலரி மாளிகையில் உள்ளவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களை அந்தப் பகுதிக்குள் நுழையவிடாமல் தடுத்து வேறு பாதையில் அனுப்புமாறு தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி பலமுறை பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன் பிரகாரம், தேசபந்து தென்னக்கோன் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் அலரிமாளிகையிலிருந்து வெளியேறிய குழுவினரை நவம் மாவத்தை வழியாக அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும், முன்னாள் பிரதி அமைச்சர் சனத் நிஷாந்த உட்பட பெருந்தொகையானவர்கள் காலி வீதியூடாக மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம நோக்கி பயணித்திருந்தனர்.

அவர்கள் குழுவை காலி முகத்திடலை நோக்கிச் செல்வதைத் தடுக்க பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாக தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

காலி முகத்திடல் மைதானத்துக்குள் நுழைவதற்கு முன்னர், அந்த குழுவை கலைக்க நீர்த்தாரை பிரயோக வாகனம் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தேசபந்து தென்னக் கோன் வழங்கிய வாக்குமூலங்களின்படி, பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவுடன் தனிப்பட்ட முறையில் பேசி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டாம் என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த குழுவினர் காலி முகத்திடலை நோக்கி பேரணியாக சென்றதையடுத்து, அவர்களை கலைக்க பொலிஸார் தயாராக இருந்தனர்.

அப்போது, தேசபந்து தென்னக்கோனை கையடக்கத் தொலைபேசியில் அழைத்த உயர்பாதுகாப்பு அதிகாரி ஒருவர், குழுவைக் கலைக்க நீர்த்தாரை பிரயோகமோ, கண்ணீர் புகைக் குண்டுகளையோ பயன்படுத்தவேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளார்.

கலவரக்காரர்களை தடுக்க பொலிஸார் கடுமையாக முயன்றும், அதை செயல்படுத்த முடியவில்லை. காலி முகத்திடல் மைதானத்தில் அமைதியாக போராடியவர்கள் மீது கலவரக்காரர்கள் மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்ததாக தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மோதலை கட்டுப்படுத்துவதற்கும் போராட்டக்காரர்களை கலைப்பதற்கும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை பயன்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

காலி முகத்திடல் போராட்டப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின்போது ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை குண்டுகளை பிரயோகித்ததாக தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் உள்ளிட்ட 22 பேரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபரை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)





## தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 18

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அவ்வமைப்பின் தலைவர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சக உறுப்பினர்களால் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (அ)

## இரு ஊடவியலாளர்களின் தொலைபேசிகள் பறிமுதல்!

கொழும்பு, மே 18

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் முடிந்த பின்னர் அதனை காணொளிப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் இரண்டு ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பிரகீத் பெரேரா மற்றும் கசுன் சமரவீர ஆகிய ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபாநாயகரிடம் முறையிட்டார்.

நடப்பு பிரதமர் ஊடக சுதந்திரத்துக்கு சார்பானவர் என்ற அடிப்படையிலும் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்ற அடிப்படையிலும் குறித்த ஊடகவியலாளர்களின் தொலைபேசிகள் மீள வழங்கப்படவேண்டும் என்று சஜித் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் கவனம் செலுத்துவதாக தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மனுஷ நாணயக்கார, ஆளும் கட்சியின் சண்டித்தனம் காரணமாகவே நாட்டில் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரச்னை ஏற்பட்டுள்ளது என்று நினைவுப்படுத்தினார். (அ)

## பொருளாதார மறுமலர்ச்சி திட்டத்தை தயாரிக்க தயார்

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மே 18

பாராளுமன்றத்தில் பொது நிதிக் குழுவின் தலைவராக இருக்கவும், பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்ட பாராளுமன்ற முன்மொழிவான "அனைத்துக் கட்சி பொருளாதார மறுமலர்ச்சித் திட்டத்தை" தயாரிப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்கவும் தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது ருவிட்டர் தளத்தில் பதிவொன்றினையிட்டு தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில் "பல பொது நிதிக் குழு என்பது பாராளுமன்றத்தில் மிகவும் சக்திவாய்ந்ததாகும்.

இது அரசியலமைப்பு விதி 148 ஐ நிறைவேற்றுவதற்கான பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இது பொது நிதியின் "முழுக் கட்டுப்பாட்டை" வழங்குகிறது.

சட்டபூர்வமற்ற அரசாங்கத்தை விட, இங்கு என்னால் ஒரு பெரிய பாத்திரத்தை வகிக்க முடியும் என தான் உணர்வதாக அவர் கூறியுள்ளார். (அ)

## படகில் இருந்து தவறி விழுந்த மீனவர் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை உதயபுரம் பகுதியை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது 53) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது மகனுடன் தொழிலுக்குச் சென்ற வேளை கடலில் தவறி விழுந்து காணாமல் போனார். நேற்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# அடிக்கடி ஆட்டம் கண்டு வரும் மகிந்தவின் அரசியல் வாழ்க்கைக்கு காரணம் நினைவுத்தூபியா?

அனுராதபுரத புனித மண்ணில் சிறிலங்காவின் முப்படையினரையும் நினைவு கூர்ந்து கட்டப்பட்ட நினைவுத்தூபியால் மகிந்த ராஜபக்சவின் அரசியல் வாழ்க்கை அடிக்கடி ஆட்டம் கண்டு வருவதாக அருண லக்ஸ்மன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சிங்களத்தில் எழுதிய நீண்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகளை கீழே தருகின்றோம்.

ஒரு பழைய பௌத்தரிடம் அவரது வாழ்நாள் முழுவதும் எஞ்சியிருக்கும் ஆசை என்ன என்று நீங்கள் கேட்டால், அவர் பெரும்பாலும் அதமஸ்தான வழிபாடு என்று பதிலளிப்பார். ஜெயஸ சிறி மஹா போதி உள்ளிட்ட பழங்கால மன்னர்களால் கட்டப்பட்ட கோவில்கள் மற்றும் விகாரைகளை உள்ளடக்கிய அதமஸ்தானத்தை வழிபடுவது சிறிலங்காவில் மட்டுமன்றி உலகின் ஏனைய பாகங்களிலும் வாழும் பௌத்தர்களின் பிரதான விருப்பமாக மாறியமையே இதற்குக் காரணம்.

அநுராதபுரம் புனித நகரம் அதமஸ்தானத்தை மையமாகக் கொண்டது. இது மிகவும் தொல்பொருள் மதிப்புடையது. அனுராதபுரம் புனித நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தின் இருப்பிடம் பற்றிய இறுதி முடிவுகளுக்கு வருவதற்கு முன், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இன்னும் போதுமான ஆதாரங்களை சேகரிக்க போராடி வருகின்றனர்.

இத்தகைய மிகை உணர்திறன் உள்ள பகுதியில் புதிதாக ஒன்றைக் கட்டுவது கண்ணில் உள்ள இமைகளை அகற்றுவது போன்றது. ஏனெனில், இத்தகைய தொல்பொருள் இடங்கள் சில நொடிகளில் உலக வரலாற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

எவ்வாறாயினும், இவ்வாறான பெறுமதிகளை மீறி 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தலத்தில் புதிய டகோபாவை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

இது அரசாங்க விவகாரம் என்று கூறப்பட்டாலும், அரச தலைவராக அன்று இருந்த மகிந்த ராஜபக்சவின் வேண்டுகோளின் பேரில் மாத்திரமே இது மேற்கொள்ளப்பட்டது. தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, மூன்று தசாப்த கால போரில் உயிரிழந்த முப்படையைச் சேர்ந்த 30,000 இற்கும் அதிகமான இராணுவத்தினரை நினைவு கூரும் நோக்கில் அனுராதபுரத்தில் புதிய பகோடா ஒன்றை அமைக்க அரச தலைவர் விரும்பினார்.

முதலில் "ரணவிரு சேய" என அழைக்கப்பட்ட இது பின்னர் "சண்டஹிரு சேய" என பெயர் மாற்றம் பெற்றது. அரச தலைவரின் இந்த யோசனைக்கு நாட்டில் உள்ள மிதவாத மக்கள், பிக்குகள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நினைவுத்துாபி கட்டுவது அவசியமானால், அதனை நாட்டின் வேறு இடத்தில் கட்ட வேண்டும் என்றும், புனித நகரமான அனுராதபுரத்தின்



புராதன விழுமியங்களைக் கருத்தில் கொண்டு இந்த கட்டுமானத்தை மேற்கொள்ளக்கூடாது என்றும் அவர்கள் தெரிவித்தனர். எவ்வாறாயினும், இராணுவத்தினரை நினைவு கூர்ந்து பகோடாவை நிர்மாணிப்பதன் மூலம் பயனடையக்கூடிய தனது சிங்கள பௌத்த வாக்காளர்களை மனதில் வைத்து அவர்களின் ஆலோசனையை மகிந்த ராஜபக்ச பொருட்படுத்தவில்லை.

ருவன்வெலி சேயாவின் உயரமான 299 அடி உயரத்தில் புதிய தாகோபாவை நிர்மாணிப்பதே அரசாங்கத்தின் ஆரம்பத் திட்டமாகும். புனித நகரத்திலேயே காணி ஒன்றைக் கேட்க வேண்டிய நிலைக்கு தொல்பொருள் திணைக்களம் தள்ளப்பட்டதால் அதிகாரிகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.

எனினும், அன்று தொல்பொருள் ஆணையாளராக இருந்த பேராசிரியர் செனரத் திசநாயக்க அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்கவில்லை. அதமஸ்தானத்திலிருந்து வெகு தொலைவில் மற்றொரு தாகம் கட்டப்பட்டதும், அதமஸ்தானத்தை புதிய இடமாக மாற்றியதும் பழிவாங்கும் செயல் என்று பரவலாக நம்பப்பட்டது.

பழங்கால ஸ்தூபிகளுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே தொடர்பு இருப்பதால், ஸ்தூபியை நிர்மாணிப்பதில் அரசாங்கம் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடும் என்று மற்றொருவர் கூறினார்.

கடந்த காலங்களில் ருவன்வெலி சேயாவை விட உயரமான கோபுரத்தை நிர்மாணித்திருக்க முடியும் எனவும் ஆனால் வெளிவராத உண்மையின் காரணமாக அநுராதபுரத்தில் மற்றுமொரு கோபுரத்தை நிர்மாணித்திருக்க முடியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் அறிவியல் பகுப்பாய்வு இருந்தபோதிலும், அரசியல்வாதிகள் பலர் வீணான ஆபத்துக்களுக்கு பயப்பட்டார்கள். அந்த பயமுறுத்தும் எண்ணங்களாலும், பேராசிரியர் செனரத் திசநாயக்கவின் கடும் எதிர்ப்பினாலும், பூஜா நகருக்கு வெளியே ருவன்வெலி சேயாவை விடக் குட்டையான சந்திரன் ஹிரு சேயாவைக் கட்டுவதற்கு அரசாங் கம் பின்வாங்க வேண்டியதாயிற்று.

கட்டுமானத்தை எதிர்ப்பவர்கள் பல்வேறு காரணங்களுக்காக அவ்வாறு செய்தனர். சில தரப்பினர் தொல் பொருள் மதிப்பின் காரணமாகவும், மற்றவை கட்டடக் கலை குறைபாடு களாலும் அவ்வாறு செய்தனர். விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாத காரணங்களுக்காக சந்திரன் மற்றும் சூரிய ஸ்தூபியை எதிர்த்தவர்களும் இருந்தனர். குறிப்பாக இந்த தாகோபாவை நிர்மாணிப்பது தொடர்பில் கருத்து தெரிவித்த பேராசிரியர் அகலகட சிரிசுமண தேரர், மிகவும் நடைமுறை மற்றும் தர்க்க ரீதியான அடிப்படையில் சந்திரன் மற்றும் சூரிய ஸ்தூபியுடன் உடன்படவில்லை.

போரை நினைவு கூரும் வகையில் உலகில் எங்கும் தகோபா கட்டப்படவில்லை எனவும், அதனைக் கட்டுவது வீண் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த ஸ்தூபிக்கு வீரமரணம் அடைந்த வீரர்களை நினைவுகூருவதற்கு மட்டுமின்றி, மூன்று தசாப்த கால போரில் உயிரிழந்த சிங்கள, தமிழர், முஸ்லிம்கள் உட்பட அனைத்து சமூகத்தினரையும் நினைவுகூரும் வகையில் இந்த ஸ்தூபிக்கு பெயர் சூட்ட வேண்டும் என ஏனைய கட்சிகள் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய் துள்ளன. அவ்வாறு செய்வதன் மூலம், பகோடா உலகளாவிய மத மதிப்புமிக்க இடமாக மாறும் மற்றும் இன நல்லிணக்கத்திற்கு பங்களிக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர். ஆனால் மகிந்தவோ அல்லது முன்னைய அரசாங்கமோ செவிசாய்க்கவில்லை.

நாட்டின் நான்காவது பெரிய தாகோபாவான சேயாவின் நிர்மாணப்பணிகள் அனுராதபுரத்தில் உள்ள மஹாமெவுன உயனத்திற்கு சொந்தமான காணியில் ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 22, 2010 அன்று சந்திரன் மற்றும் சூரிய ஸ்தூபியின் அடிக்கல் நாட்டப்பட்டது.

நன்கொடையாளர்கள் மற்றும் படைவீரர்களின் சம்பளத்தில் இருந்து மிகக் குறைந்த தொகையில் ஸ்தூபியை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டது. அது அரசாங்கத்திற்கு சுமையாக இருக்காது. அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பணிப்புரையின் பேரில் பாதுகாப்பு செயலாளராக இருந்த தற்போதைய அரச தலைவர் கோத்தா பய ராஜபக்சவின் நேரடி வழிகாட்டலின் கீழ் இந்த நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்கவின் மேற்பார்வையின் கீழ் 4 ஆவது பொறியியல் சேவைகள் படைப்பிரிவின் அதிகாரிகள் சந்தஹிரு சேயாவை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்தனர்.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் சிறிலங்கா பொறியியல் கூட்டுத்தாபனமும் இதற்கு ஆதரவளித்தன. சண்டஹிரு சேயா 282 அடி 6 அங்குல உயரம் கொண்டது மற்றும் ருவன்வெலி மஹா சேயா, அபயகிரி மற்றும் ஜேதவனாராமய ஆகிய இடங்களுக்குப் பிறகு சிறிலங்காவின் மிக உயரமான தாகமாக இருந்தது.

நவம்பர் 23, 2014 அன்று, சேயாவின் நினைவுச்சின்னங்கள் பொக்கிஷமாக வைக்கப்பட்டன மற்றும் 8 கிலோ செப்பு மற்றும் தங்க சிலை பொக்கிஷமாக வைக்கப்பட்டது. செப்புத் தங்கம் என்று தனித்தனி வகை தங்கம் இல்லை என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறினாலும், இந்த தங்கச் சிலைகளின் கதைக்கு அப்போதைய ஊடகங்கள் சிறப்பு முக்கியத்துவம் அளித்தன.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# வட கொரியாவில் கோவிட்:

## 10 லட்சம் பேருக்கு மேல் தொற்று?

தடுப்பூசி எடுத்துக்கொள்ளாத வட கொரிய நாடு முழுவதும் கோவிட் 19 தொற்று அலை அலையாகப் பரவி வரும் நிலையில், இந்த நெருக்கடியைக் கையாளும் பணியில் ராணுவம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது.

சுகாதாரத் துறை அலுவலர்களை கடுமையாக விமர்சித்த வட கொரியத் தலைவர் கிம் ஜோங் - உன் மருந்துகளை விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு ராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் 10 லட்சம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இதை “காய்ச்சல்” என்று மட்டுமே வட கொரிய அரசு ஊடகம் குறிப்பிடுகிறது.

சுமார் 50 பேர் இறந்துள்ளனர். ஆனால், கோவிட்டால் இறந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இவர்களில் எத்தனை பேருக்கு கோவிட் பரிசோதனையில் பாசிடிவ் வந்துள்ளது என்று தெரியவில்லை.

கோவிட் 19 வந்துள்ளதா என்பதைக் கண்டுபிடிக்கும் பரிசோதனை வாய்ப்புகள் வட கொரியாவில் மிகவும் குறைவான அளவிலேயே உள்ளன. எனவே, சிலருக்கே கோவிட் 19 உறுதி செய்யப்பட்டுள்ளது.

### அதிக பாதிப்புக்கு காரணம் என்ன?

தடுப்பூசி போடப்படாததாலும், மிகவும் பின்தங்கிய சுகாதாரக் கட்டமைப்பு காரணமாகவும், வட கொரிய மக்கள் கோவிட் தொற்றால் பாதிக்கப்படும்



வாய்ப்பு அதிகம். உலகின் பிற பகுதிகளில் இருந்து பெரிதும் துண்டிக்கப்பட்டு வாழும் இந்த நாட்டில் தேசம் தழுவிய பொது முடக்கம் அமலில் உள்ளது.

கடந்த வார இறுதியில் அவசர அரசியல் தலைமைக் குழுக் கூட்டத்தை கூட்டிய நாட்டுத் தலைவர் கிம், தேசிய மருந்துக் கையிருப்பில் இருந்து சரியான முறையில் மக்களுக்கு மருந்துகளை விநியோகிக்கவில்லை என்று அதிகாரிகளை விமர்சித்ததாக அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

“தலைநகர் பியோங்யாங்கில் மருந்து விநியோகத்தை உடனடியாக ஸ்திரப்படுத்துவதற்கு, ராணுவத்தின் ஆற்றல்மிக்க” மருத்துவப் பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார்.



தங்கள் நாட்டில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக முதல் முதலாக கடந்த வாரம் அறிவித்தது வட கொரியா. ஆனால், நீண்ட காலமாகவே அந்நாட்டில் வைரஸ் தொற்று இருந்து வந்திருக்க வாய்ப்புள் ளது என்கிறார்கள் வல்லுநர்கள்.

கோவிட் பரவலைக் கட்டுப்படுத்த அதிக பட்ச கட்டுப்பாடுகளை கிம் விதித்துள்ளார். பொது முடக்கம், வேலை செய்யும் இடங்களில் ஒன்று கூடுவதற்கான தடைகள் போன்றவை இதில் அடக்கம்.

அஸ்ட்ராஜெனீகா மற்றும் சீனாவில் உற்பத்தியான தடுப்பூசிகளின் மில்லியன் கணக்கான டோஸ்களை வட கொரியாவுக்கு அளிக்க கடந்த ஆண்டு சர்வதேச சமூகம் முன்வந்தது. ஆனால், தனது நாட்டின் எல்லைகளை மூடுவதன் மூலமாக கோவிட்டை கட்டுப்படுத்திவிட்டதாக 2020 ஜனவரியில் அறிவித்திருந்தது வடகொரியா.

வட கொரியாவின் நில வழி எல்லையில் தென் கொரியா, சீனா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. சீனா தனது மிகப் பெரிய மாநகரங்களில் ஒமிக்ரான் அலை பரவுவதைக் கட்டுப்படுத்த பொது முடக்கத்தை அறிவித்துப் போராடிக் கொண்டிருக்கிறது சீனா.

### “அளவற்ற உதவி செய்ய தென் கொரியா தயார்”

வட கொரியா கேட்குமானால், அளவு வரம்பில்லாமல், தடுப்பூசி டோஸ்கள், சுகாதாரப் பணியாளர்கள், மருத்துவக் கருவிகள் போன்ற சுகாதார உதவிகளை அனுப்பிவைக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது அதன் சகோதர நாடான தென் கொரியா.

அதிவேகமாகப் பரவும் கோவிட் 19 நோய் ஒரு பேரழிவு என்று கடந்த சனிக்கிழமை குறிப்பிட்டார் கிம்.

“நம் நாடு உருவாக்கப்பட்டதில் இருந்து இது வரை சந்தித்த துன்பங்களிலேயே இந்த நோய் மிகப் பெரியது,” என்று அவர் கூறியதாக அரசு செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. குறிப்பிட்டுள்ளது.

இந்த நோய்ப் பரவலால் நேரடியாக ஏற்பட்டுள்ள சுகாதாரத் தாக்கத்தைத் தவிர, உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பது குறித்த அச்சமும் நிலவுகிறது. வட கொரியாவில் 1990களில் மோசமான பஞ்சம் ஏற்பட்டது. அந்நாட்டில் உள்ள 2.5 கோடி மக்களில் 1.1 கோடி மக்கள் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பதாக இப்போது உலக உணவுத் திட்டம் மதிப்பிட்டுள்ளது. இந்த நோய்ப் பரவல் காரணமாக விவசாயத் தொழிலாளர்கள் உழவில் ஈடுபட முடியாமல் போனால், அதன் விளைவுகள் மிகத் தீவிரமாக இருக்கும் என்றும் உலக உணவுத் திட்டம் கணிக்கிறது.

# அடிக்கடி ஆட்டம் கண்டு வரும் . . .

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், இன்று இந்த சிலை தொடர்பான பல சர்ச்சைகள் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகின்றன. தங்க புத்தர் சிலை தவிர, தங்கத்தால் செய்யப்பட்ட போதி மரமும், தங்க இலையில் பொறிக்கப்பட்ட திரிபிடகமும் உள்ளது. மேலும், வெளியாட்கள் வழங்கிய வெள்ளி, முத்து, ரத்தினக் கற்களும் இங்கு வைக்கப்பட்டிருந்தன.

மகிந் ராஜபக்ச ஆர்வத்துடன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்த போதிலும், எதிர்பார்த்தபடி சண்டஹிரு சேயாவின் நிர்மாணப் பணிகளை முடிக்க முடியவில்லை. 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் அவருக்குப் போட்டியாக அவரது சொந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் எதிர்பாராத விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2009 போர் வெற்றியோடு அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனவின் வரவால் ஒரு மோசமான தோல்வியை சந்தித்தார். அவர் ஒருபோதும் தோற்கடிக்கப்படமாட்டார் என்று பலர் நம்பினர். அரச தலைவர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தனக்குப் போட்டியாளர்கள் இல்லை என்று கூறிய மகிந்த ராஜபக்ச, அனுராதபுரம் புனித பிரதேசத்தில் தன்னிச்சையாக தாகக்கோபை நிர்மாணித்தமையினால் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்துள்ளதாக பலரும் தெரிவித்தனர்.

எனினும் அரச தலைவராக பொறுப்பேற்ற மைத்திரிபால சிறிசேனவோ அல்லது அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ சந்தஹிரு சேயாவின் பணிகளை கைவிட்டுவிட்டு குறைந்த பட்சம் திரும்பிப் பார்க்கக் கூட விரும்பவில்லை.

2020 ஆம் ஆண்டு மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ச, சுமார் ஐந்து வருடங்களாக கைவிடப்பட்டிருந்த சந்தஹிரு சேயாவை நிர்மாணிக்கும் பணியை தொடங்கினார். அப்போது சந்தஹிரு சேயாவை கட்ட வேண்டாம் என அரசாங்கத்தை எச்சரித்தவர்கள், இந்த தன்னிச்சையான நிர்மாணத்தை நிறுத்துவதே பொருத்தமானது என தெரிவித்த போதிலும் கட்டுமானம் தொடர்ந்தது. சந்தஹிரு சேயா இறுதியாக நவம்பர் 18, 2021 அன்று பொதுமக்கள் வழிபாட்டிற்காக திறக்கப்பட்டது.


2014 இல் புதையல்கள் பொக்கிஷமாக வைக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பின்னர், பணிகள் நிறைவடைந்த 6 மாதங்களிலேயே மீண்டும் ராஜபக்சக்களின் துரதிர்ஷ்டம் அவர்களுக்கு ஏற்பட்டது. மூன்று வருடங்களின் பின்னர், பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் கவிழ்ந்து, இந்நாட்டு மக்களால் அரசன் போல் நடத்தப்பட்ட மகிந்த ராஜபக்ச, பிரதமர் பதவியை விட்டு, தலைமறைவானார்.

ராஜபக்சக்கள் ஏழெட்டு தசாப்த கால அரசியல் வாழ்க்கையை கைவிட்டு, அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட காரணத்தினால் தற்போது இராணுவ பாதுகாப்பில் வாழ்கின்றனர்.

அது மாத்திரமன்றி, ராஜபக்ச வம்சத்தின் தொட்டில் என்று கருதப்படும் மெதமுலன அரண்மனை தீயிட்டு கொளுத்தப்பட்டதுடன், பழங்கால ராஜபக்சக்களின் சமாதிகளும் கூட தரை மட்டமாக்கப்பட்டன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.....................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

....................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    *(30 புள்ளிகள்)*

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட் எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 11100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

---

கல்வி tv CHANNEL-1

**18.05.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**18.05.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலையில் படகு கவிழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

திருமலை, மே. 18

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் இறக்ககண்டி வாழையூற்று பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய துஷ்யந்தன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று இளைஞர்கள் இணைந்து படகில் சென்றபோது படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றைய இருவர் தப்பியதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குறித்த இளைஞனின் சடலம் நிலாவெளி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# எங்கள் ஜனநாயகப் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்

## கலையரசன் எம்.பி. தெரிவிப்பு

**கல்முனை, மே. 18**

**மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டனவே தவிர எந்த அரசியல் தலைவர்களிடமும் நல்ல நோக்கம் இருக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.**




தமிழர்களுக்கு ஒரு நிலையான சமாதானம் கிடைக்கப் பெறவேண்டும் என்ற எங்கள் ஜனநாயக ரீதியான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

கல்முனையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டின் வடக்கு, கிழக்கு தாயகத்தில் மட்டுமல்லாது உலகத்திலே பல நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரிலே கல்முனை மாநகரசபை உறுப்பினர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டது.

இந்த நாட்டில் ஒரு நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும். இங்கு வாழுகின்ற தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் போராடியிருந்தார்கள். அந்தப் போராட்டம் ஜனநாயக ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் 2009 இற்கு முற்பட்ட காலத்தில் இருந்தது.

இதில் கவனம் செலுத்தாத இந்த அரசாங்கம் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டு இலட்சக் கணக்கான மக்களை ஒரு இடத்தில் கொத்துக் கொத்தாக அழித்த நாளாக இன்றைய நாளை நாங்கள் அனுஷ்டித்துக் கொண்டு வருகின்றோம்.

இந்த நாட்டிலே தமிழினத்திற்கு ஏற்பட்ட இந்த அவலநிலை இந்த நாட்டில் வாழுகின்ற எந்த இனத்திற்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்கள் தங்களது கலாசாரத்தை, இருப்பை நிலைநிறுத்தவேண்டும் என்பதற்காகவும் போராடியவர்கள்.

ஆனால் இந்த நாட்டை ஆண்டு வந்த எந்த அரசியல் தலைவர்களிடமும் ஒரு நல்ல நோக்கம் இருக்கவில்லை.

அன்று முள்ளிவாய்க்காலிலே படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கப் பெறவில்லை.

சர்வதேச ரீதியாக வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைக் கூட ஏற்று இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை உலக நாடுகளும் அறிந்து கொண்டுள்ளன.

அந்த வகையிலே இந்த நாட்டிலே வாழுகின்ற பூர்வீக இனம் தொடர்ச்சியாக இவ்வாறான அடக்குமுறைக்கு ஆளாகக் கூடாது என்ற அடிப்படையில் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக எமது மண்ணிலே ஏற்பட்ட அவலங்களை நினைவுகூர்ந்து இவ்வாறான நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

நிச்சயமாக தமிழர்களுக்கு ஒரு நிலையான சமாதானம் கிடைக்கப் பெறவேண்டும் என்ற எங்களது ஜனநாயக ரீதியான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த அடிப்படையில், இப்போது வாழுகின்ற எமது இளைய சமூகம் எமது மண்ணிலே எமது இனம் வாழ்வதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அவ்வாறு வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்திலே தமிழர்கள் மட்டுமல்லாது ஏனைய இனங்களும் இணைந்து சமத்துவமான ஒரு அரசியற் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு முன்னின்று உழைக்க வேண்டும்-என்றார்.

(அ)

# ஏறாவூர் வன்முறை; 12 பேர் கைதாகினர்

மட்டக்களப்பு, மே. 18

மட்டக்களப்பு - ஏறா வூர் நகரில் கடந்த 10 ஆம் திகதி இரவு வன் முறைகளில் ஈடு பட்ட பிரதான நபர் உட்பட 12 பேரை கைது செய்திருப்பதாக ஏறா வூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறைக் கும்பலில் சம்பந்தப்பட்ட மேலும் பலர் தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

பிரதான சந்தேக நபர் தனது அணியைச் சேர்ந்த ஏனையோரையும் வன்முறையில் ஈடுபடு மாறு கூவி அழைப்பது காணொளிக் காட்சியில் இருப்பதாகவும் இதன் அடிப்படை யிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூரில் வன்முறையில் ஈடுபட்ட கும்பல் மூன்று ஆடைத் தொழில் சாலைகளைச் சேதமாக்கியிருந்த தோடு, முன்னாள் அமைச்சர் நஸீர் அஹ மட்ஸ்ரீடின் வாடகைக் கட்டட மான அவரது அலுவலகம், அவரது சகோதரரின் வீடு, சகோதரரின் புதல்வருக்குச் சொந்தமான உணவகம் ஆகியவற்றைத் தாக்கி தீயிட்டும் கொளுத்தியிருந்தது.

(அ)

# புலிகள் தாக்குவார்கள் என்ற புரளியால் புனர்வாழ்வாளிக்கப்பட்டோர் பாதிப்பு!

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவிப்பு

திருமலை, மே. 18

மே 18, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று, விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தவுள்ளனர் என்ற புரளி செய்தி, தமிழ் மக்களையும் புனர்வாழ்வாளிக்கப்பட்ட போராளிகளையும் பாதித்துள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.



உண்மைக்கு புறம்பான இந்தச் செய்தியை வன்மையாக கண்டிக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

திருகோணமலையில் உள்ள ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டா கோ ஹம போராட்ட பூமியை கலைக்க, மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டு பண்ணவே இந்த புரளியை ஏற்படுத்தியுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது மஹிந்த அரசாங்கத்துக்கு இனப் படு கொலைக்கான சகலவிதமான ஆயுதங்களையும் கொடுத்துத உதவி புரிந்தது இந்திய அரசாங்கமே. இலங்கையில் ஆயுதக் குழுக்களை உருவாக்கவும் மீண்டும் தமிழர்கள் மீது வன்முறைகளை திணிப்பதற்காகவும் செயற்படும் இந்திய அரசின் சதித் திட்டமாக மாறியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 30 வருடங்களின் பின் சமூகத்துடன் புனர்வாழிக்கப்பட்டு இணைந்து வாழ்கின்ற நேரத்தில், பல துன்பங்களை அனுபவிக்கிறோம். வாழ்வதற்கான பொருளாதார நிலை கூட மோசமடைந்த நிலையில் உள்ளது. இவ்வாறாக இருக்கும் போது, மோதல்களை வன்முறையை தூண்டும் செயற்பாடு வேதனையளிக்கிறது.

ஜனநாயக ரீதியான அரசாங்கத்தை நாம் எதிர்பார்க்கிறோம். எனினும், புலம்பெயர் தமிழர்கள் இணைந்து விடுதலை புலிகளின் மீள் உருவாக்கம் தொடர்பாக இட்டுக் கட்டப்பட்ட செய்தியை இந்தியா எம் மீது அரசியல் இலாபத்துக்காக திணிக்கிறது-என்றார்.

(அ)

# முள்ளிவாய்க்கால் நோக்கிய பேரணி திருகோணமலையிலிருந்து ஆரம்பம்

திருமலை, மே. 18

பொத்துவிலில் இருந்து ஆரம்பித்த இன விடுதலையை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம் நேற்று காலை திருகோணமலையில் இருந்து ஆரம் பித்தது.




இன விடுதலையை வேண்டி பொத் துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையான மக்கள் பேரணி ஒன்று கடந்த 15ஆம் திகதி பொத்துவிலில் இருந்து ஆரம்பமாகி நேற்று முன் தினம் திருகோணமலையை வந்தடைந்தது.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்த இந்த பேரணி திருகோணமலை சிவன் கோவிலுக்கு முன்பாக நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பேரணி திருகோணமலையிலிருந்து ஆரம்பமாகி நிலாவெளி, குச்சவெளி, புல் மோட்டை ஊடாக தென்னமரவாடியை சென்ற டைந்து அங்கிருந்து வவுனியா ஊடாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

அத்துடன் பேரணியின் ஆரம்பத்தில் முள்ளி வாய்க்கால் கஞ்சியும் அனைவருக்கும் பகிரப்பட்டது.

இந்த மக்கள் பேரணியில் மதகுருமார்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர் வலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# அமெரிக்க படைகள் மீளவும் சோமாலியா செல்கின்றன!

## உத்தரவில் ஒப்பமிட்டார் பைடன்

வாஷிங்டன், மே 18

அல்-கொய்டா தீவிரவாத அமைப்பின் மிகப்பெரிய கிளைக் குழுவான அல்-ஷபாப் தீவிரவா திகளை எதிர்கொள்வதற்காக சோமாலியாவில் மீண்டும் அமெ ரிக்கப் படைகள் நிலைநிறுத்தப்ப டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதற்கான உத்தரவில் ஜனா திபதி ஜோ பைடன் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கையொப் பமிட்டார்.

அல்-ஷபாப் தீவிரவாதிகளை எதிர்கொள்ளும் போராட்டத்தில் சோமாலிய படைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காகவும் ஏனைய ஆத ரவை வழங்குவதற்காகவும் ஆபி ரிக்காவின் பிற இடங்களில் இருந்து அமெரிக்கத் துருப்புக்கள் சோமா லியாவுக்கு நகர்த்தப்படும் என பைடன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, சோமாலியாவில் அமெரிக்க படைகள் நேரடியாக போர் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என பென்ரகன் ஊடகச் செயலாளர் ஜோன் கிர்பி



கூறினார். அல்-ஷபாப் தீவிரவாதி களை சிறப்பாக எதிர்கொள்ள சோமாலிய படைகளுக்கு உதவு வதே அமெரிக்கப் படைகளை மீண் டும் சோமாலியாவில் நிலைநிறுத் துவதற்கான நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதான ரஷ்ய போர் குறித்து உலகம் கவனம் செலுத்தி வரும் இதேவேளை, உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான நீண்ட போராட்டத்தில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது என்பதை இது தெளிவுபடுத்துகிறது எனவும் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

இதனிடையே, சோமாலியாவில் நிலைநிறுத்தப்படும் அமெரிக்க துருப்புக்களின் மொத்த எண்ணிக்கை 500க்கு கீழ் இருக்கும் என ஜனாதி பதி பைடனின் மூத்த நிர்வாக அதி காரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# இந்தியாவில் 9 கோடி மக்கள் பட்டினியால் பாதிக்கப்படுவர்!

புதுடில்லி, மே 18

காலநிலை மாற்றம் காரணமாக 2030ஆம் ஆண்டுக் குள் சுமார் 9 கோடி இந்தியர்கள் பட்டினியால் பாதிக் கப்படுவார்கள் என்று ஆய்வு ஒன்று கூறுகிறது.

இது தொடர்பான ஆய்வை உலகளாவிய உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில், "பருவநிலை மாற்றத்தால் 2030ஆம் ஆண்டுக் குள் ஒன்பது கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் பட்டினியால் வாடுவார்கள். இந்தியாவில் தானியங்கள், இறைச்சிகள், பழங்கள், காய்கறிகள், எண்ணெய் வித் துக்கள், பருப்பு வகைகள், வேர்கள் மற்றும் கிழங்குக ளின் உணவு உற்பத்தி குறியீடு காலநிலை மாற்றம் காரணமாக 1.627இல் இருந்து 1.549 ஆக குறையலாம். அதாவது, 2030ஆம் ஆண்டு காலத்தில் சராசரி கலோரி நுகர்வில் சிறிய சரிவு உருவாகலாம்.

அதாவது, ஒரு நபருக்கு 2,697 (கிலோ கலோரிஃ ஒருநாள்)இலிருந்து 2,651 (கிலோ கலோரிஃ ஒருநாள்) ஆக குறைய நேரிடலாம். 2100ஆம் ஆண்டுக்குள் இந்தியா முழுவதும் சராசரி வெப்பநிலை 2.4 டிகிரி செல்ஸியலிருந்து 4.4 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கோடை காலங்களில் வெப்ப அலைகள் 2100ஆம் ஆண்டளவில் மூன்று மடங்கு அல்லது நான்கு மடங் காக உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த சராசரி வெப்ப நிலை உயர்வால் இந்தியாவில் விவசாயம் பாதிக்கப்படும் சூழல் உருவாகும். மேலும், காலநிலை மாற்றத்தால் விவசாய விளைச்சல் 2041 - 2060 காலக்கட்டத்தில் 1.8 முதல் 6.6 சதவீதமாகவும், 2061 - 2080 காலக்கட்டத்தில் 7.2 முதல் 23.6 சதவீத மாகவும் குறையக் கூடும்.

காலநிலை மாற்றம் நம் கண் முன்னே அரங்கேறி வருகிறது. உலகெங்கிலும் லட்சக்கணக்கான வனவிலங் குகள் அவற்றின் பாதிப்பை உணர்ந்து வருகின்றன. மனி தர்களும் அதன் தீவிரத்தை கடந்த பத்து ஆண்டுகளாக எதிர்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனின் மரியூபோல் நகரம் முழுமையாக ரஷ்யா வசமானது

## உக்ரைன் படைகள் ஒப்பந்த அடிப்படையில் வெளியேற்றம்

கீவ், மே 18

ரஷ்ய படைகளின் முற்றுகைக் குள் இருந்த மரியூபோல் துறைமுக நகரத்தில் உள்ள கடைசி உக்ரேனிய கோட்டையான அசோவ்ஸ்டல் உருக்கு ஆலையில் இருந்த எஞ்சி யிருந்த உக்ரேனிய படையினர் மற்றும் பொதுமக்கள் இரு தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இதன் மூலம் உக்ரைனில் வள மான மரியூபோல் நகரம் கடும் மோதலுக்குப் பின்னர் முழுமையாக ரஷ்யா வசமானது.

அசோவ்ஸ்டல் உருக்காலையில் காயமடைந்த நிலையில் 3 உக்ரே னிய படையினர் மீட்கப்பட்டு கிழக்கே சுமார் 32 கிலோமீற்றர் தொலைவில் ரஷ்ய கட்டுப்பாட் டில் உள்ள நோவோசோவ்ஸ்க் நகரத்தில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் 211 பேர் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப் பாட்டில் உள்ள ஒலெனிவ்கா நகருக்கு அழைத்துச் செல்லப்பட் டனர் என்று உக்ரைன் துணை பாதுகாப்பு அமைச்சர் அண்ணா மல்யார் தெரிவித்தார். வெளியேற்றப்பட்ட அனைவரும் ரஷ்யாவுடன் சாத்தியமான கைதி கள் பரிமாற்றத்திற்கு உட்படுத் தப்படுவார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

அசோவ்ஸ்டலில் இருந்து துருப்புக்களை ஏற்றிச் செல்லும் ஐந்து பேருந்துகள் திங்கட்கிழமை பிற்பகுதியில் நோவோசோவ்ஸ்க்கு வந்ததை சர்வதேச ஊடகங்கள் உறுதி செய்துள்ளன.

"எங்கள் தோழர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று நாங்கள்



நம்புகிறோம்" என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்றுமுன்னதினம் இரவு நேர உரையில் கூறினார். " அவர்களில் பலத்த காயமடைந்த வர்கள் உள்ளனர். அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். உக்ரைனுக்கு உக்ரேனிய வீரர்கள், வீராங்கனைகள் உயிருடன் தேவை." எனவும் ஜெலென்ஸ்கி குறிப்பிட்டார்.

இதனிடையே அசோவ்ஸ்டல் உருக்காலைக்குள் எஞ்சியிருக்கும் அனைத்து உக்ரேனிய படையின ரையும் மீட்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன என்று இரா ணுவம் மேலும் கூறியது. எத்தனை துருப்புக்கள் எஞ்சியுள்ளன என்பதை அது தெரிவிக்கவில்லை. மொத்தமாக படையினர், பொது மக்கள் உள்ளிட்ட 600 பேர் வரை அங்கு எஞ்சியிருந்தனர் என்று நம் பப்படுகிறது.

இந்த வெளியேற்றமானது மரியூபோலில் இடம்பெற்ற மிக நீண்ட மற்றும் இரத்தக்களரி போரின் முடிவை குறிப்படுதுடன், உக்ரைனுக்கு குறிப்பிடத்தக்க தோல்வியாகவும் அமைந்துள்ளது.

காயமடைந்த உக்ரேனிய வீரர்களை நோவோசோவ்ஸ்கில் உள்ள மருத்துவமனைக்கு வெளி யேற்ற ரஷ்யா நேற்று ஒப்புக் கொண்ட சில மணி நேரங்களுக்கு பிறகு அசோவ்ஸ்டல் உருக்கு ஆலையில் இருந்த எஞ்சியிருந்த உக்ரேனியப் படையினர் மற்றும் பொதுமக்கள் வெளியேற்றப் பட்டனர்.

அணு ஆயுதப் போரைத் தாங்கும் வகையில் அமைக்கப் பட்ட ஆழமான பதுங்கு குழிகள், சுரங்கங்களில் 81 நாட்களாக தங்கியிருந்தவர்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர். (ஐ)

# பிரான்ஸின் பிரதமராக எலிசபெத் பதவியேற்பு!

பாரிஸ், மே 18

பிரான்ஸின் புதிய பிரதமராக எலிசபெத் போர்ன் நேற்றுமுன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

முந்தைய அரசில் தொழிலாளர் அமைச்சராக இருந்த எலிசபெத் போர்ன் கடந்த 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரதமரான பெண்ணாவார். அத்துடன், நவீன பிரெஞ்சு வரலாற்றில் இரண்டாவது பெண் பிரதம மந்திரியாக இவர் உள்ளார்.

பிரான்ஸில் உள்ள அனைத்து இளம் பெண்களுக்கும் இந்த நியமனத்தை நான் அர்ப்பணிக்கிறேன், உங்கள் கனவுகளைப் பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கூறுகிறேன் என பதவியேற்கும்போது போர்ன் கூறி னார். எங்கள் சமூகத்தில் பெண்களுக்கான இடத்துக் கான போராட்டத்தை நிறுத்தக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

61 வயதான போர்ன், தொழிலாளர் அமைச்சர், சிவில் சேவையாளர், பொது நிர்வாக அதிகாரி, பொறி யியலாளர் என பல தளங்களில் பணியாற்றியவராவார்.

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற இமானுவேல் மக்ரோன் இரண்டாவது முறையாக அந்நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார். இதையடுத்து பிரான்ஸ் அரசில் மாற்றங்களை கொண்டு வர அவர் முடிவு செய்தார். இதன் அடிப்படையில் பிரான்ஸ் பிரதமராக இருந்த ஜீன் கஸ்டெக்ஸ் நேற்று தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்தே முந்தைய அரசில், தொழிலாளர் அமைச்சராக பதவி வகித்து வந்த எலிசபெத் போர்ன் பிரதமராக நியமிக்கப்பட்டார். (ஐ)



ஈழநாடு



# ஆசிய கிண்ண வலைபந்து; இலங்கை அணியில் தர்ஜினி!

கொழும்பு, மே 18

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 13ஆவது ஆசிய வலைபந்தாட்ட தொடருக்கான இலங்கை அணியில் தமிழ் வீராங்கனையான சிவலிங்கம் தர்ஜினி மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். மூன்று ஆண்டுகளின் பின்னர் அவர் மீண்டும் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

ஆசியாவின் அதி உயரமான வலைபந்தாட்ட வீராங்கனையும் ஒரு சுற்றுப் போட்டியில் அதிக கோல்கள் போட்ட சாதனையாளரு மான தர்ஜினி இங்கிலாந்தில் 2019 இல் நடைபெற்ற உலகக் கிண்ண வலைபந்தாட்டப் போட்டியி லேயே கடைசியாக விளையாடியிருந்தார்.

இதேபோன்று, அனுபவம் வாய்ந்த வீராங்கனையும் முன்னாள் அணித் தலைவியுமான செமினி அல்விஸூம் குழாத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அணி விவரம்:

சத்துரங்கனி ஜயசூரிய, செமினி அல்விஸ், துலாஞ்சலி வன்னிதிலக, திஸலா அல்கம, ஹசித்தா மெண்டிஸ், லக்மாலி பண்டார, கயாஞ்சலி அமரவன்ச, இதுஷா ஜனனி, சுசிமா பண்டார, திலினி வத்தேகெதர, ரஷ்மி திவ்யாஞ்சலி, அகிலா சஞ்சி, மல்மி ஹெட்டிஆராச்சி, ஹாஷினி டி சில்வா, தர்ஜினி சிவலிங்கம், மரிஷா பெர்னாண்டோ, தீபிகா தர்ஷனி, சுரேக்கா கமகே.






# பஞ்சாப் கிங்ஸை வீழ்த்தியது டில்லி

மும்பை, மே 18

பஞ்சாப் கிங்ஸூக்கு எதிராக மும்பையில் நடந்த போட்டியில் 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது டில்லி கப்பிட்டல்ஸ் அணி. இந்த தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் ஈட்டிய 7ஆவது வெற்றி இதுவாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

லியாம் லிவிங்ஸ்ரனின் முதல் பந்திலேயே டேவிட் வோர்ணர் (0) ஆட்டமிழந்தபோதிலும் சர்பராஸ் கான், மிச்செல் மார்ஷ் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல முயற்சித்தனர்.

சர்பராஸ் கான் (32) வெளியேறிய பின்னர் களம் நுழைந்த லலித் யாதவ் 24 ஓட்டங்களைப் பெற்றார். 3ஆவது விக்கெட்டில் மிற்செல் மார்ஷூடன் 47 ஓட்டங்களைப் பகிர்ந்தார். 11 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்லி எஞ்சிய 9 ஓவர்களில் மேலும் 4 விக்கெட்களை இழந்து 61 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரிஷப் பந்த் (7), ரோவ்மன் பவல் (2) ஆகிய இருவரும் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளுடன் ஆட்டமிழந்தனர்.

மிச்செல் மார்ஷ் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 63 ஓட்டங்களைப் பெற்றார். அக்சர் பட்டேல் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் லியாம் லிவிங்ஸ்ரன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அர்ஷ்தீப் சிங் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

பஞ்சாப் அணிக்காக ஜொனி பெயார்ஸ்ரோ (28), ஷிகர் தவான் (19) ஆகிய இருவரும் 23 பந்தகளில் 38 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும் அதன் பின்னர் விக்கெட்கள் சீரான இடைவெளிகளில் வீழந்தன.

பெயார்ஸ்ரோ, பானுக ராஜபக்ஷ (4), தவான், மயன்ங் அகர்வால் (0), லிவிங்ஸ்ரன் (3), ஹார்ப்ரீட் ப்ரார் (1), ரிஷி தவான் (4) ஆகியோர் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஷர்துல் தாகூர் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் அக்சார் பட்டேல், குல்தீப் யாதவ் ஆகிய இருவரும் தலா 14 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# விஷ்வாவுக்கு மூளை அதிர்ச்சி அணியிலிருந்து வெளியேறினார்!

டாக்கா, மே 18

பங்களாதேஷூக்கு எதிராக டாக்காவில் நடக்கும் ஐ. சி. சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் 3ஆம் நாளில் இலங்கையின் வேகப்பந்துவீச்சாளர் விஷ்வா பெர்னாண்டோ அணியிலிருந்து வெளியேறினார்.

விஷ்வா பெர்னாண்டோவுக்கு மூளை அதிர்ச்சி ஏற்பட்டமையால் அவர் அணியிலிருந்து அழைக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக கசுன் ராஜித அணியில் சேர்க்கப்பட்டார்.

போட்டியின் 2 ஆம் நாளான நேற்று திங்கட்கிழமையன்று தேநீர் இடைவேளைக்கு சற்று முன்னர் பங்களாதேஷ் வேகப்பந்துவீச்சாளர் ஷொரிபுல் இஸ்லாம் வீசிய பந்து விஷ்வா பெர்னாண்டோவின் ஹெல்மெட்டைப் பதம் பார்த்தது.

இதையடுத்து மூளை அதிர்ச்சிக்குள்ளான விஷ்வா பெர்னாண்டோ தற்காலிகமாக ஓய்வு பெற்று, மீண்டும் துடுப்பெடுத்தாடி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

நேற்று அவர் களமிறங்கிய விஷ்வா 4 ஓவர்களை வீசினார். மதிய போசனத்தின் பின்னர் அவருக்கு மூளை அதிர்ச்சி உணரப்பட்டதால் உடனடியாக அவர் அணியிலிருந்து மீள அழைக்கப்பட்டார்.

# கெயில், வில்லியர்ஸூக்கு பெங்களூர் அணி கௌரவம்!

மும்பை, மே 18

வாழ்த்தரங்கம் (Hall of fame) என்ற புதிய நடைமுறையை ஐ. பி. எல். தொடரில் ஆரம்பித்துள்ளது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி.

கிரிக்கெட்டில் அதிகமாகப் பங்களித்தவர்களுக்கு உயடட ழக கயஅந என்ற கௌரவம் அளிக்கப்படும். ஐ. பி. எல். தொடரில் இதை ஆரம்பித்துள்ள பெங்களூர் அணி, முன்னாள் வீரர்களான கிறிஸ் கெயில், டி வில்லியர்ஸ் ஆகியோருக்கு இந்தக் கௌரவத்தை அளித்துள்ளது.

2011-17 வரை பெங்களூர் அணியில் கெயில் விளையாடியுள்ளார். பிறகு கடந்த வருடம் வரை பஞ்சாப் அணியில் இடம்பெற்றார். 2011 முதல் கடந்த வருடம் வரை பெங்களூர் அணிக்காக டி வில்லியர்ஸ் விளையாடியுள்ளார்.

வாழ்த்தரங்கம் அறிவிப்பு தொடர்பான காணொலியை பெங்களூர் அணி வெளியிட்டுள்ளது. இந்த நிகழ்வில் இருவரின் பெயர்களையும் கோலி அறிவித்தார். பிறகு இணையம் வழியாக கெய்லும் டி வில்லியர்ஸூம் தங்களுடைய மகிழ்ச்சியை பெங்களூர் அணியுடன் பகிர்ந்தனர்.

ஐபிஎல் 2022 போட்டியில் நாளைய தினம் தனது கடைசி லீக் ஆட்டத்தில் குஜராத் அணியுடன் பெங்களூர் மோதுகிறது. (ஐ)






# ஐ. பி. எல். தொடரில் அதிக விக்கெட்கள்!

மும்பை, மே 18

ஐ. பி. எல். தொடரில் அதிக விக்கெட்கள் எடுத்த தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா.

2017 முதல் ஐ. பி. எல். தொடரில் விளையாடி வரும் ரபாடா, இதுவரை 62 போட்டிகளில் 98 விக்கெட்களை எடுத்துள்ளார். ஐ. பி. எல். 2022 ஏலத்தில் ரபாடாவை 9. 25 கோடிக்கு இந்திய ரூபாய்க்கு எடுத்தது பஞ்சாப் அணி.

ரபாடா டில்லிக்கு எதிரான நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஒரு விக்கெட் எடுத்தார். இதன்மூலம் ஐ. பி. எல். தொடரில் அதிக விக்கெட்கள் எடுத்த தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

இதற்கு முன்பு டேல் ஸ்ரெய்ன் 97 விக்கெட்டுகள் எடுத்திருந்தார். (ஐ)

# இந்தியாவிலிருந்து இன்று வரும் 40 மில்லியன் உணவு பொதிகள்

கொழும்பு, மே 18

**குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணமாக ஒரு வார காலத்திற்கு தேவையான பால் மா உட்பட உலர் உணவுகள் அடங்கிய 40 மில்லியன் உணவு பொதிகளை இந்திய அரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.**

இந்திய வழங்கியுள்ள இந்த அன்பளிப்பு பொதிகள் அடங்கிய முதல் தொகையை ஏற்றிய கப்பல் இன்று இலங்கையை வந்தடைய உள்ளதாக அத்திய வசிய உணவு விநியோகம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஆராய பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமித்த குழுவின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணம், பதுளை உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இந்த உணவு பொதிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு உட்பட அத்தியவசிய பொருட்களுக்கு




தட்டுப்பாடு நிலவி வருகிறது.

பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களை கவனத்தில் கொண்டு 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா, 137 வகை உயிர்காக்கும் மருந்து உட்பட அத்தியவசிய பொருட்களை தமிழக அரசாங்கம், இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் ஊடாக இன்று இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகளை செய்துள்ளது. (அ)

# காலி முகத்திடல் கலவரம் இதுவரை 664 பேர் கைது!

கொழும்பு, மே 18

கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் பகுதிகளில் கடந்த 9ஆம் திகதி இடம் பெற்ற கலவரம் தொடர்பாக இதுவரை 664 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் இது தொடர்பாக 258 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 67 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 43 பேர் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்ட மற்றுமொரு குழுவினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 206 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 272 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களின் மேற்பார்வையில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் மீது சட்டவிரோத கூட்டம், தாக்குதல், காயம், சொத்துக்களை அழித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படவுள்ளது-என்றார். (அ)

# சீரற்ற வானிலை காரணமாக 8000 பேருக்கு மேல் பாதிப்பு

கொழும்பு, மே 18

கடந்த சில நாட்களாக பெய்த கனமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 8,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் இயற்கை அனர்த்தங்களினால் இருவர் காயமடைந்துள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையத்தின் அறிக்கையின்படி, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணத்தில் 2099 குடும்பங்களைச் சேர்ந்த 8,331 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 1,991 குடும்பங்களைச் சேர்ந்த 7,934 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 108 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக 232 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையம் தெரிவித்துள்ளது.(அ)

# வன்முறைகளில் பாதிக்கப்பட்ட 71 எம்.பிக்களுக்கு புதிய வீடுகள்

கொழும்பு, மே 18

அண்மையில் நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களின் போது 71 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர்களுக்கு விரைவாக புதிய வீடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தலவத்துகொட பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக 100 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

அவற்றை விரைவில் நிறைவு செய்து பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இடம்பெற்ற வன்முறை காரணமாக சில பாராளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் தனித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பாராளுமன்றம் தலையிட்டு அவர்களுக்கு விரைவில் வீடுகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. (அ)

# அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கல்

கொழும்பு, மே 18

அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து நேற்று முதல் எரிபொருளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒவ்வொரு மாவட்டத்திலும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ்.ருவன் சந்திர தெரிவித்தார்.

குறித்த தெரிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களூடாக சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்காக எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதனிடையே, எரிபொருளுக்காக வரிசைகளில் நிற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மக்களை கேட்டுள்ளார். (அ)

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலின் புதல்வி இங்கிலாந்தில் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி

கொழும்பு, மே 15

இங்கிலாந்தில் நடைபெற்ற டொட்டஹன் வட்டாரத்துக்கான உள்ளூராட்சித் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் ஊடாக போட்டியிட்ட ஊவா மாகாணசபை ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மிலின் புதல்வி ஷஸ்னா முஸம்மில் வெற்றி பெற்றுள்ளார்.

அப்பிரதேசத்தில் இலங்கை வாக்காளர்கள் இல்லாதபோதிலும் இந் நகரை தெரிவு செய்து, அப் பிரதேசத்தில் தனது பிரசார சமூக சேவைகளைச் செய்து



அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் மனதை அவர் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மே மாதம் 5ஆம் திகதி குறித்த தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இங்கிலாந்தில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புகளை நிறைவு செய்துள்ள ஷஸ்னா முஸம்மில், சமூக சேவை அமைப்புக்களில் தொண்டராக பல்வேறு அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து வயது முதியவர்களுக்கு உதவுதல், கெயினாஷ் இளைஞர் அமைப்பு ஊடாக சிறுவர்கள், சிறையில் உள்ள பெற்றோர்கள், அவர்களது குழந்தைகள் பராமரிப்பு போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகின்றார். (அ)

# கொழும்பில் மீண்டும் மஹிந்த!

கொழும்பு, மே 18

பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துவிட்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் பதுங்கி இருந்த மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் கொழும்பு வந்துள்ளதாக ஜே. வி.பி. ஆதரவு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

கொழும்புக்கு அருகில் உள்ள அடையாளம் தெரியாத இடத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர் தங்கி இருக்கும் இடத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கூடுதல் பாதுகாப்பை வழங்குவதற்காக சிறப்பு பொலிஸ் குழுக்கள் நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்புக் அழைத்து வரப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது -என்றுள்ளது. (அ)

# மாத்தறை மக்களை மிரட்டும் அடையாளம் தெரியாத மிருகம்

கொழும்பு, மே 18

மாத்தறை, மிதிகம பிரதேசத்தில் அடையாளம் தெரியாத மிருகம் ஒன்றை நேற்று கண்டு பிடித்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிதிகமவில் பல கிராமங்களில் சுற்றித் திரிந்த விலங்கினால் கிராம மக்கள் அச்சமடைந்துள்ளதுடன் இளைஞர்கள் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் விலங்கை தேடி வருகின்றது.

அதன்படி, நேற்று முன் தினம் மிதிகம ஜெயவிஜய கிராமத்தில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த மிருகம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், மிருகம் வன்முறையில் ஈடுபட முற்பட்டபோது கிராம மக்கள் அதனை கயிற்றினால் கட்டி வைத்துள்ளனர்.



நான்கு கால் மற்றும் நீண்ட வால் கொண்ட இந்த உயிரினத்தை இதுவரை பார்த்ததில்லை என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாத்தறை மிரிஸ்ஸ வனஜீவராசிகள் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டபோதிலும் நேற்று முன்தினம் மாலை வரை எவரும் விலங்கை ஏற்றிச் செல்ல வரவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

## பெண் பிரதி...

பிரதிச் சபாநாயகராக இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அப்பதவியை மீண்டும் இராஜினாமா செய்ததால், பாராளுமன்றத்தில் நேற்று பிரதி சபாநாயகருக்கான தேர்வு முதல் விடயமாக நடைபெற்றது.

இதன்போது பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ரோஹினி குமாரி கவிரத்னவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்மொழிய, அதனை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற அஜித் ராஜபக்ஷவின் பெயரை, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பிரேரித்தார்.

இவ்வாறு பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டதால், அதற்கு சுதந்திரக்கட்சி, 10 கட்சிகளின் கூட்டணி உள்ளிட்டவை கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

வாக்கெடுப்பின்றி, இணக்கப்பாட்டுடன் பிரதி சபாநாயகர் தெரிவுசெய்யப்படவேண்டும். எனவே, பாராளுமன்றத்தை ஒத்திவைத்து, கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி முடிவொன்றை எடுக்குமாறும் வலியுறுத்தினர்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்தனர். இதனால் சபையில் கடும் சொற்போர் மூண்டது.

இதனையடுத்து விரும்பினால், இரு வேட்பாளர்களில் ஒருவரின் பெயரை நீக்கிக்கொள்ளுமாறு, பெயரை முன்மொழிந்தவர்களிடம் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். அதற்கு இரு கட்சிகளும் உடன்படவில்லை.

இறுதியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் அஜித் ராஜபக்ஷவுக்கு 109 வாக்குகளும், ரோஹினி குமாரி கவிரத்ன 78 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 23 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார்.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை, பொது இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்தார். அந்த கோரிக்கையை அரச பங்காளியான பொதுஜன பெரமுன ஏற்றுக்கொள்ளவில்லை.

சர்வக்கட்சி அரசு, தேசிய இணக்கப்பாட்டு அரசு என அறிவிப்புகள் வந்தால் கூட, பிரதிச் சபாநாயகர் தேர்வில்கூட கட்சிகளிடையே இணக்கப்பாடு இன்மை, மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## 21ஆவது...

பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபருடன் நேற்று கலந்தாலோசனை மேற்கொண்டார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து அந்த அதிகாரத்தை பாராளுமன்றத்துக்குப் பெற் றுக்கொடுக்கும் பொருட்டு நல்லாட்சி அரசால் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு கொண்டுவந்த 20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற வகையில் அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள் மற்றும் பொது அமைப்புக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அதற்கான முஸ்தீபுகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டிருந்தன.

20ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான 21ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சட்டமா அதிபருடன் கலந்தாலோசனை மேற்கொண்டார் என்று தெரியவருகின்றது. (அ)

## நான் எந்த...

பாராளுமன்றமே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உயிரிழந்துள்ளார். அன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம எம்முடன் இணைந்து செயற்பட்டார். இப்போது தாக்கப்பட்டுள்ளார். இப்போது பல வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதாக கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் ஏன் இந்த பாராளுமன்றத்தை குற்றம் சாட்டுகிறார்கள்?

எல்லோரும் ஒரே நேரம் எழுந்து நின்று பேசும் இந்த பாராளுமன்றக் கலாசாரம் ஒழிக்கப்படவேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த கலாசாரத்துடன் நாம் முன்னேற முடியாது. முதலில் இதை சரி செய்வோம். இதை மாற்ற இரு தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன். கலாசாரத்தை மாற்றுங்கள். ஏதேனும் கேள்விகள் இருந்தால் பேசலாம். கருத்துக்களை மாற்றவேண்டாம். கொள்கைகளை மாற்றவேண்டாம். நீங்கள் பேச விரும்பும் நபருடன் எழுந்துநின்று பேசுங்கள். மற்றவர்கள் அமர்ந்திருக்கட்டும்.

புதிய பாராளுமன்ற கலாசாரத்தை உருவாக்குவதற்காக நாடாளுமன்ற தேசிய சபையை நிறுவவேண்டியது அவசியம் - என்றார். (அ)

## ஹரின், மனுஷ...

அவர்கள் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, ஸ்தாபிக்கப்படவுள்ள அனைத்து கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்பட நடவடிக்கை எடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அனைத்து கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப்படும் பட்சத்தில் அமைச்சின் பொறுப்புக்களை உரிய வகையில் நிறைவேற்றவுள்ளதுடன், அமைச்சர்களுக்கு கிடைக்கப்பெறும் வரப்பிரசாதங்கள் எவையையும் ஏற்கப்போவதில்லை எனவும் அவற்றை நாட்டை கட்டியெழுப்புவதற்காக ஒதுக்குவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## அத்தியாவசிய...

அமைச்சின் செயலாளரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தொலைதூரத்தில் இருந்து பணிக்கு வரும் அதிகாரிகளை அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பணியிடத்திற்கு தற்காலிகமாக இணைக்க தேவையான அதிகாரங்கள் நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

மின்சாரம், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று கூறப்பட்டது. (அ)

## பொதுஜன...

இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட 22 பேரை கைது செய்ய சட்டமா அதிபர் நேற்று பணிப்புரை விடுத்திருந்தார்.

இதற்கு அமைவாகவே இந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்றிரவு குற்றப்புலனாய்வு பிரவினரால் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# ரணிலின் நடத்தை வெட்கக்கேடானது

## சுமந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, மே. 18

எதிர்க்கட்சி சார்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணையை தோற்கடிக்க அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய பிரதமர் ரணிலின் நடத்தை வெட்கக்கேடானது சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் பேசிய அவர், ஜனாதிபதியை யார் பாதுகாக்கிறார்கள், யார் உங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்பது நாட்டுக்கு தெரியும் என கூறினார்.

ஜனாதிபதிக்கு எதிரான இந்த பிரேரணை தயாரிக்கப்பட்டபோது, அப்போது எதிர்க்கட்சியில் இருந்த பிரதமர் அதற்கு ஆதரவு என கூறினார்.

பிரதமர் பதவிக்கு வருவதற்கு முன்பு ஒருகொள்கையோடும் பிரதமர் பதவி கிடைத்த பின்னர் இன்னொரு கொள்கையை கொண்டுள்ளார் என்றும் சுமந்திரன் கடுமையாக சாடினார். (அ)



# யாழ்ப்பாண முஸ்லிம் மக்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மே. 18

யாழ்ப்பாண முஸ்லிம் மக்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் இடம்பெற்றது.

ஐக்கியத்திற்கான யாழ் முஸ்லிம் சமூகத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டு வீதியால் பயணித்தோருக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கினர். (அ)

# அளவெட்டி கனி மீது நேற்று வாள்வெட்டு!

## சண்டிலிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 18

வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்த அளவெட்டி கனி என்றழைக்கப்படுபவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு மற்றொரு வன்முறைக் கும்பல் தப்பித்துள்ளது.

நேற்று மாலை 6.30 மணியளவில் சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஏ. ரதீஸ்வரன் (வயது-37) என்பவரே தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

“வட்டிக்கு கொடுத்த பணத்தை வசூலிப்பதற்காக சண்டிலிப்பாய் பகுதிக்கு வந்த போது அளவெட்டி கனி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்த தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்தனர்.

தலையில் படுகாயமடைந்த அளவெட்டிக் கனி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்” என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வாள்வெட்டுக் கும்பல் தப்பித்து சங்குவேலி பகுதியினால் பயணித்த போதும் வீதியில் கடமையிலிருந்த மானிப்பாய் பொலிஸார் கண்டுக்காமல் நின்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (அ)

## புலிகளின்...

அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்து அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். (அ)

## முள்ளிவாய்க்கால்...

லியோ கேட்டுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் - நான்காம் கட்ட ஈழப் போர் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. இறுதிப் போர் கட்டத்தில் தமிழ் மக்களின் பிரதேசங்கள் மீது பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டு கொடூரமான போர் ‘மனிதாபிமான போர்’ என்ற பெயரில் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பஸிலின் கட்டுப்பாட்டில் தொடர்ந்தும் பெரமுன!

கொழும்பு, மே 18

**பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்யும் வாக்கெடுப்பின் மூலம் சிறீலங்கா பொதுஜன பெரமுனவை இன்னும் கட்டுப்படுத்தி வருவது பஸில் ராஜபக்ஷ என்பது நிரூபணமாகியுள்ளதாக எதிர்க்கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

இவர்கள் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து இதனை கூறியுள்ளதுடன் இதன் காரணமாக தம்மால் அரசாங்கத்தில் இணைய முடியாது எனவும் அறிவித்துள்ளனர்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தனர்.

எனினும் பாராளுமன்றத்தில் நேற்று பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்யும்போது எதிர்க்கட்சியை சேர்ந்த ஒரு உறுப்பினரை அந்த பதவிக்கு தெரிவு செய்ய இணக்கம் வெளியிடப்பட்டிருந்தது.

இறுதியில் பஸில் ராஜபக்ஷ தலையிட்டு பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவரை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முற்பகல் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ள எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், இப்படியான நிலைமையில் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்ள முடியாது எனக் கூறியுள்ளனர்.

(அ)

## 7 எம்.பிக்களிடம் வாக்குமூலம்!

கொழும்பு, மே 18

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய, காலி முகத்திடல் சம்பவம் தொடர்பில் 7 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பெறப்பட வேண்டும் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 10 - 1944



உதிர்வு 14 - 05 - 2022

### தம்பிராசா உலகராஜா

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், சவூதி அரேபியா சுலையனா, சுவிஸ் Zürich ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா உலகராஜா அவர்கள் 14.05.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிராசா அன்னலட்சுமியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஜானகியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகனும்,காலஞ்சென்ற இந்திராதேவி அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான உதயகுமார், விஜயகுமார் மற்றும் சுபேந்தினி (உஷி- ஜேர்மனி), உஷேந்தினி(சத்தி- சுவிஸ்), வசந்த் (அப்பன்- பிரான்ஸ்), தர்மினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுபாகரன்(ஜேர்மனி), செல்வானந்தவேல் (சுவிஸ்), ரூபி(சுவிஸ்), அஜந்தா(பிரான்ஸ்), கேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னத்தம்பி, உலகேஸ்வரி, சிவக்கொழுந்து, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,கமலா, காலஞ்சென்ற நடராஜா, பாஸ்கரசாமி, துரைராஜா, சந்திரலேகா, ராணி, இராஜேஸ்வரி(சுவிஸ்), பரமேஸ்வரி(ஜேர்மனி), அன்னராணி (ஆசிரியை- யாழ். வல்வை மகளிர் கல்லூரி), மனோகரி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நடராஜா, கந்தசாமி, சிவம்(சுவிஸ்), அருந்தவராஜா(ஜேர்மனி), தனேஸ்வரன், தேவராஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும்,விஜி, தர்ஷன், நிரோஷன், நிஷாந்த், சிந்துஜன், அனுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,பாமினி, சஜீவன், விதுஷன், பாமதி ஆகியோரின் பெரியப்பாவும்,அனுஜன், நிலக்ஷன், ஆதி, மதுஷன், நிதுஷன், சாருஹா, திவிஷா, அனோஸ்கா, லாருஜன், ருஷாந், அக்ஷிதா, சஞ்சிகா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 18 May 2022 1:00 PM - 6:00 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

*கிரியை*
Thursday, 19 May 2022 9:00 AM - 1:30 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

*தகனம்*
Thursday, 19 May 2022 1:30 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வசந்தன் (மகன்)**

*தொடர்புகளுக்கு:*
**வசந்தன் - மகன்** Mobile : +33652751839
**உஷி(சுபேந்தினி)** - *மகள்* Mobile : +4915175419389
**உஷேந்தினி(சத்தி)** - *மகள்* Mobile : +41764676445
**தர்மினி - மகள்** Mobile : +33782405050

## பாராளுமன்ற அவைக்கு சாணக்கியன் எம்.பி தலைமை தாங்குவதை தடுத்தாரா தினேஸ்?

கொழும்பு, மே 18

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோருக்கும் அவை தலைவர் தினேஸ் குணவர்த்தனவுக்கும் இடையில் கடுமையான வாத விவாதங்கள் இடம்பெற்றன. இதன் காரணமாக பாராளுமன்றச் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டது.

நேற்றைய பாராளுமன்ற அமர்வுக்கு தலைமை தாங்கிய சபாநாயகர், ஒத்திவைப்பு விவாதம் ஒன்றின் போது, தமக்கு அடுத்ததாக பாராளுமன்றத்துக்கு தலைமை தாங்குவதற்காக தம்மை அழைத்த போதும், அவைத் தலைவர் தினேஸ் குண வர்த்தன அதனை தடுத்ததாக சாணக்கியன் குற்றம் சுமத்தினார்.

தம்மை சபைக்கு தலைமை தாங்குமாறு படைக்கல சேவிதர் கேட்டுக்கொண்டமைக்கு அமைய தாம் தயாராக இருந்தபோதும், தினேஸ் குணவர்த்தன, சபாநாயகருக்கு அனுப்பிய சில தகவல்களின் அடிப்படையில் தமக்கு பதிலாக மற்றும் ஒருவர் சபைக்கு தலைமை தாங்க அழைக்கப்பட்டமையானது, பாராளுமன்ற உறுப்பினரான தமது சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று சாணக்கியன் குற்றம் சுமத்தினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் டீல் தொடர்பான விவாதத்தின்போது, தாம் சபைக்கு தலைமை தாங்குவதை தினேஸ் குணவர்த்தன விரும்ப வில்லை என்றும் சாணக்கியன் குறிப்பிட்டார்.

இந்த குற்றச்சாட்டுக்கு தினேஸ் குணவர்த்தன பதிலளிக்கவேண்டும் என்று சாணக்கியன் கோரினார்.

எனினும் சாணக்கியன், காலத் துக்கு காலம் இவ்வாறான பிரச் னைகளை எழுப்பி வருவதாக தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார். எனவே இந்த விடயத்துக்கு தாம் பதிலளிக்கப்போவ தில்லை என்றும் சபாநாயகரே பதிலளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது, சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேனவை பேசுவதற்கு அழைத்தமையை அடுத்து, சாணக்கியனுக்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும் தினேஸ் குணவர்த்தனவுக்கும் இடையில் கடும் தர்க்கம் தொடர்ந்தது. (அ)

## முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களை பாராளுமன்றில் நினைவேந்திய கஜேந்திரன்!

தமிழ் தேசியத்தின் மீது சிங்கள பௌத்த பேரினவாதிகள் நடத்திய இனவழிப்பு போரில் இறந்தவர் களை தாம் அஞ்சலிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

இனப்படுகொலைக்கு காரணமானவர்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் கஜேந் திரன் குறிப்பிட்டார். ரணில் விக்ரமசிங்க தற்போது பிரதமரான வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளார் என்றும் மஹிந்த ராஜபக்ஷவினாலேயே, ரணில் விக்ரமசிங்க வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தமிழர்களிடம் இருந்து தலைவர்களை தேடாது, அவர்களிடம் இருந்து முகவர்களை தேடுவதே இதுவரை இனப்பிரச்னை தீர்க்கப்படாமைக்கான காரணம் என்றும் கஜேந்திரன் தெரிவித்தார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 08 - 1932



உதிர்வு 17 - 05 - 2022

### திருமதி நவரத்தினம் சரஸ்வதி

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஆலங்கேணி பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சரஸ்வதி அவர்கள் 17.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான சதாசிவம், பூபதி மற்றும் அருளம்மா(பிரான்ஸ்), காலஞ்சென்ற ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானம்பிகை(யோகம்), கனகாம்பிகை(சாந்தம்), புனிதாம்பிகை(ராசாத்தி), விமலாம்பிகை(பவளம்), கணேசமூர்த்தி(ரவி), சிவகுமார்(சிவா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்ற நாகேந்திரம், மாணிக்கவாசகர், சேதுராசா, துரைராசா, செல்வராஜேஸ்வரி, அழகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாலசுந்தரம், பாலச்சந்திரன்(சுவீடன்), பாலரோகினி(சுவீடன்), பாலராஜ், தயாபரன்(லண்டன்), தேவன் (பிரான்ஸ்), தீபன்(பிரான்ஸ்), வதனி(லண்டன்), சுகந்தன்(கனடா), யசிந்தா(இந்தியா), மகிந்தா(லண்டன்), சபிதா(கனடா), சயிந்தன்(சுவிஸ்), கயேந்தினி(லண்டன்), துஸ்யந்தினி (சுவிஸ்), கஜீபன்(லண்டன்), வேணுஜன்(சுவிஸ்), சிந்துஜன்(பிரான்ஸ்), வேணுகா, மேனகா, பானுஜன், சிலைக்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சங்கவி, தனுரினி, பவிந்தினி, சருஜன், வதுமிலன், ஆதேஷன், அஷிகா, அபினுகா, ஆதர்ஷா, அஸ்வித், சதூர், சாதிகா, சபரிஷன், சஞ்சனா, அபிஷா, யது, மகிஷா, நிக்ஷா, மர்ஷா, ரித்விக், அஷ்வின், அஸ்ணா, சையிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.05.2022) புதன்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொள்ளுப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கணேசமூர்த்தி (ரவி) - மகன்**

*தொடர்புகளுக்கு:*
**பாலராஜ் - பேரன்** Mobile : +94777868762
**துரைராசா - மருமகன்** Mobile : +94771730677
**கணேசமூர்த்தி(ரவி) - மகன்** Mobile : +94774627673

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சிவப்பு மஞ்சள் பச்சை,டிமோன்டி காலனி திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகதோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

